www.padippakam.com


# தொழிலாளர் பாதை

தொழிலாளர்பாதை நான்காம்அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைப்பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படுகின்றது.

தொகுப்பு வெளியீடு இல 12

இலக்கம் 451, 452 இலிருந்து இந்த இதழுக்கான கட்டுரைகள் தொடுக்கப்பட்டுள்ளன.

DM 2.00 1.12.1994


உள்ளே


பாரசீகவளைகுடாவில் வாசிங்டனின் புதிய ஆக்கிரமிப்பின் பின்னணியில்........பக்கம் 2

பொதுஜனமுன்னணி அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையின் பின்னணியில்.........பக்கம் 3

IRA போர்நிறுத்தத்தின் பின்னர் தொழிலாளவர்க்கத்திற்கான முன்வழி..........பக்கம் 6

அரசாங்க மாற்றமும், தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் உள்ள ஆபத்துக்களும்.........பக்கம் 9

சந்திரிக்கா குமாரதுங்காவும், தீவிரவாதிகளும்.........பக்கம் 10

பொதுஜனமுன்னணி விடுதலைப்புலிகளின் நேசக்கரங்கள்.........பக்கம் 3


# பொதுஜனமுன்னணியின் வெற்றி இலங்கையின்அரசியல் நெருக்கடியை ஆழமாக்குகின்றது

கார்த்திகை 9ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜனமுன்னணியின் வெற்றியானது தொழிலாளவர்க்கத்தின் மீதான புதியதாக்குதல்களுக்கும், பதினொரு வருடகாலம் நீடிக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கான ஒரு புதிய ஏகாதிபத்தியத் திட்டத் தீர்வுக்குமான ஒரு புதியகட்டத்தை உருவாக்கியிருக்கின்றது.

பொதுஜனமுன்னணியின் வேட்பாளர் சந்திரிக்கா குமாரதுங்கா 62 வீதமான வாக்குகளை பெற்று பதவிக்கு வந்திருக்கின்றார். பதினேழு வருடகாலமாக நாட்டை ஆட்சிசெய்த ஐக்கியதேசியக்கட்சி கடந்த தேர்தலிலும் பார்க்க 7 மில்லியன் வாக்குக்களை குறைவாகப்பெற்று வெறுமனே மொத்தத்தொகையான வாக்குகளிலிருந்து 35 வீதத்தைப் பெற்றிருக்கின்றது. 160 தேர்தல் மாவட்டங்களில் ஐக்கியதேசியக்கட்சி கிராமப்புறமான மகியங்கனையைத் தவிர வேறு ஒன்றிலும் பெரும்பான்மையான வாக்குகளைப் பெறவில்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் படுதோல்விக்குப் பின்னர் காமினி திசநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராகவும், புதிய தலைவராகவும் ஐக்கியதேசியக்கட்சி தெரிந்தெடுத்தது. இவர் கடந்த மாதம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தற்கொலைப் படையின் அங்கத்தவர் என்று சொல்லப்படுபவரால் கொல்லப்பட்டதின் பின்னர் இவரது மனைவியை வேட்பாளராக்கி அனுதாபம் பெறும் வீணான முயற்சி செய்யப்பட்டது.

மேலதிகமாக 54 மனிதர்களது உயிரைப் பறித்த இக்கொலையானது சிறீலங்காவில் முதலாளிவர்க்கத்துக்குள் உருவாகியிருக்கும் ஆழமான அரசியல் நெருக்கடியையும், ஆளும் வர்க்கத்தின் குழுக்களுக்குள் புகைந்துகொண்டிருக்கும் கொலைகாரக் குத்துவெட்டுக்களையும் வெளிப்படுத்தியது. இந்தக் குண்டுவெடிப்பின் காரணகர்த்தாக்களாக தமிழீழ விடுதலைப்புலிகள், ஐக்கியதேசியக்கட்சியின் போட்டிக்கன்னைகள், இராணுவத்தலைமை ஆகியவை உடனடிச் சந்தேகத்திற்குட்படுத்தப்பட்டன. ஐக்கியதேசியக்கட்சிக்கு எதிரான பெரும்பான்மையான வாக்குகள் இந்த நெருக்கடியைச் சுட்டிக்காட்டின. அத்துடன் இது ஒரு குழப்பமான வழியில் 1977 இலிருந்து பதவிக்கு வந்த வலதுசாரி அரசாங்கங்களுக்கெதிரான தொழிலாளர், விவசாயிகளின் வெறுப்பைக்காட்டுவதாகவும் அமைந்தது.

சர்வதேசநிதிநிறுவனத்தாலும், உலகவங்கியாலும் கட்டளையிடப்பட்ட "திறந்தபொருளாதாரக்கொள்கை" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் இந்த அரசாங்கங்கள் நூறாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலைகளை அழித்தொழித்தன. 30 வீதத்திற்கும் மேலாக உண்மையான வருமானத்தில் வெட்டுக்களை ஏற்படுத்தின.

இலவசக்கல்வி, இலவசமருத்துவம், விவசாயிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் போன்ற அனைத்து சமூகசேவைத் திட்டங்களும் துடைத்துக்கட்டப்பட்டன. இந்தக்கொள்கைகள் வடகிழக்கின் தமிழ்மக்களுக்கெதிரான இனவாதயுத்தத்துடனும், தெற்கில் இளைஞர்களை கொன்றுகுவித்து குடிகொண்டிருந்த பயங்கர ஆட்சியுடனும் இணைந்திருந்தன.

இதனால் ஏற்பட்டிருந்த வெறுப்பினை ஒரு தேர்தல் வெற்றியினுள் திசைதிருப்புவதற்கு பொதுஜனமுன்னணியினால் முடிந்தது. இது தொழிலாளவர்க்கத்தினுள் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பநிலையாலும், தொழிற்சங்கங்களாலும், மத்தியதரவர்க்க இடதுசாரிக் கட்சிகளான LSSP, CP, NSSP யினது ஒன்றுபட்ட பிரச்சாரங்களினால் தொழிலாளவர்க்கத்தின் அரசியல் சுயாதீனம் மறுக்கப்பட்டு இந்த முதலாளித்துவ வேட்பாளர்களுக்கு வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாலும் சாத்தியமாகியது.

## வரலாற்று வெற்றி

தேர்தலின் மத்தியில் இந்தச்சக்திகள் பொதுசனத்தொடர்புச்சாதனங்களின் ஒத்துழைப்புடன் சந்திரிக்கா குமாரதுங்காவினால் தலைமைதாங்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி பதவிக்கு வருவது வரலாற்று வெற்றியாகவும் ஒரு மாற்றமாகவும் இருக்கும் என கர்ணபரம்பரைக் கதைகளைப் பரப்பின.

இந்தக் கதைகளின் மறைவில் ஆளும்வர்க்கம் தனது எதிர்ப்புரட்சித் தயாரிப்புக்களை தொடர்கின்றது.உண்மையில் ஜெயவர்த்தனாவின் தலைமையில் ஐக்கியதேசியக்கட்சி.

1977ல் முதலாளித்துவத்தால் பதவி[ல்] கொண்டுவரப்பட்டது. மக்களால் அது[...]



சந்திரிக்காவும், மதகுரு ரம்புக்வெல சிறீ விப்பாசி தேரோவும்.

ஆவணி மாதத்தின் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் UNP த் தலைவர்கள் இராணுவத்தின் உதவியுடன் ஒரு சிறுபான்மை அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான முயற்சிகளைச் செய்தனர்.

இந்த முயற்சியானது இராணுவத்தளபதிகள் பொதுமக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது என எச்சரிக்கை செய்ததால் மட்டுமே ஆளும் வர்க்கத்தால் கைவிடப்பட்டு பொதுஜனமுன்னணியிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது.

முதலாளித்துவம் ஒரு இரண்டும் கெட்டான் நிலைமைக்கு முகம்கொடுக்கின்றது. பழையமுறையில் தொடர்ந்து ஆட்சிசெய்யவோ அல்லது தொழிலாள–ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மேலாக உள்நாட்டு யுத்தத்தைத் தொடரவோ முடியாத நிலையில் இருக்கின்றது.ஆதலால் குமாரதுங்காவின் அரசாங்கத்தினைப் பாவிப்பதன் மூலம் ஒரு தாக்குதலுக்கான நிலைமைகளைத் தயாரிப்பதற்காக நேரம் சம்பாதிக்கின்றது.

முன்னர் வென்றெடுக்கப்பட்ட சலுகைக[ளை] அழித்தொழிக்கவும், பிரித்தானி[ய] காலனித்துவத்தின் முடிவின் பின்ன[ர்] முப்பதுவருடகாலமாக உருவாக்கப்ப[ட்ட] பொதுநலன் பேணும் அரச அம்சங்க[ளை] உடைத்துக்கொட்டவும் ஆகும்.

இதற்கு முந்திய கூட்டரசாங்கத்[...] தாக்குதல்களில் நேரடிப்பங்கு வகித்த LS[SP] CPயின் துரோகங்களின[...] தொழிலாளர்வர்க்கத்தினுள் உருவாக்கப்ப[ட்ட] குழப்ப நிலையைப் பாவித்து UNP [...] வலதுசாரி ஆட்சியை அமைப்பத[...] முனைந்தது. இது பழைய தேசியஅபிவிரு[த்தி] வேலைத்திட்ட மூலோபாயங்களை கைவி[...] ஒடுக்கப்பட்ட நாடுகளில் லாபத்[...] உறிஞ்சுவதற்காக சர்வதேச நிதிமூலதனங்க[ளால்] உருவாக்கப்பட்ட "கரைகடந்த" உற்பத்தி[...] பதிலீடு செய்தது.

தொடர்ச்சி 11 ம் பக்கத்[தில்]

**வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்று.**

www.padippakam.com



தொழிலாளர்
பாதை

ழிலாளர்பாதை நான்காம் அகிலத்தின் னத்துலகக்குழுவின் இலங்கைப்பிரிவான க்கம்யுனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படுகின்றது. தியாவில் தொழிலாளர்பாதை லிசத்தொழிலாளர்கழகத்தினால் வெளியிடப்படுகின்றது ப்பாவில் புரட்சிக்கம்யூ னிஸ்ட் கழகத்தின் நாட்டுக்கிளையினால் மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.

லாளர்பாதையின் தொடர்பு விலாசங்கள்:

இலங்கை
Anantha Wakkumbara
90, 1st Maligaganta Lane
Colombo 10.

ஜேர்மனி
Tholilalar Pathai
Postfach 1609
74321 Bietigheim-Bissingen

பிரான்சு
RCL Exil Organisation
Tel: 40383102 Paris.

பிரித்தானியா
International Communist
Party
PO Box 71
Rotherham S 60 1SU

ஐரோப்பாவில் அச்சிட்டு வெளியிடுவோர்:
Arbeiterpresse Verlag
Postfach 100 105
45001 Essen
Germany.

## தொழிலாளர்பாதைக்கு சந்தாதாரராகுங்கள்.

லங்காசமசமாஜக்கட்சியின் துரோகங்களுக்கு எதிராக் ன்சிச பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகவும், லிசப்புரட்சி முன்னோக்கிற்கு போராடுவதற்காகவும் 68ல்புரட்சிக்கம்யூ னிஸ்ட்கழகம் சர்வதேச சிசவாதிகளினால் உருவாக்கப்பட்டது. இதனது தியோகபூ ர்வ பத்திரிகைகளாக தமிழில் தாழிலாளர்பாதையும" ,சிங்களத்தில் கறுமாவத்தையும்" வெளியிடப்படுகின்றன.

இப்பத்திரிகையின் பிரதான பணி தேசதொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப் டுவதாகும். இதுதான் தொழிலாளவர்க்கத்தினுள் லிச உணர்மையை வளர்த்தெடுப்பதற்கான ந்தனையை உருவாக்குகின்றது - இதனை அனைத்து பவாத, சந்தர்ப்பவாத போக்குகளுக்குமெதிரான மற்ற போராட்டத்தினால்தான் முன்னெடுக்க முடியும். வகையில் "தொழிலாளர்பாதை" தமிழ்பேசும் லாளர்கள் இளைஞர்கள் மத்தியில் கட்டாயமாக க்கப்படவேண்டிய பத்திரிகையாகும். சர்வதேசரீதியில் ரி நடந்துகொண்டிருக்கும் பிரமாண்டமான மாற்றங்களின் பில் தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான அரசியலைப் நிதிப்படுத்தும் தொழிலாளர்பாதை உணர்மையுள்ள ழிலாளர்களின் அரசியல் வழிகாட்டியாகும்.

ர்: ____________________

வரி. ____________________

____________________

துப்பிரதிகள் 30.–

# பாரசீகவளைகுடாவில் வாசிங்டனின் புதிய ஆக்கிரமிப்பின் பின்னணியில்.

*இந்த ஆசிரியர்கருத்து அமெரிக்க ரொக்சிச பத்திரிகையான* ***International worker*** *ல் 24.10.94ல் பிரசுரமாகியது.*

பாரசீகவளைகுடாவில் மீண்டும் ஐக்கியஅமெரிக்காவின் ஆக்கிரமிப்பானது ஐக்கியஅமெரிக்காவின் பலதேசிய வங்கிகளினதும், நிறுவனங்களினதும் லாபங்களைப் பாதுகாப்பதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ பலத்தினை உறுதியாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

குவைத்தின் மேலான ஈராக்கின் உடனடியான இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிரான பாதுகாப்பாக வாசிங்டன் தனது இராணுவக் குவிப்பினைக் காட்டிக்கொண்டது. நிலைமைகளை ஆய்வுசெய்கையில் இந்தவாதம் பிழையென அம்பலப்படுத்தப்படுகின்றது. வாசிங்டனினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வமான பிரச்சாரத்தினைத் தவிர ஈராக், குவைத்தின் மேல் படையெடுப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றுமேயில்லை. எப்படியிருப்பினும் அப்படியான ஒரு நடவடிக்கையானது இராணுவரீதியாக சாத்தியமாகாததுடன் அரசியல் ரீதியாக தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

வளைகுடாயுத்தத்தில் அமெரிக்க இராணுவபலத்தின் தாக்குதலின் முன்னால் ஈராக்கின் படைகள் குறைக்கப்பட்டுவிட்டன. நான்கு வருடங்களுக்கும் மேலான முடமாக்கும் பொருளாதாரத் தடையினால் இந்த நாடானது இராணுவத் தளபாடங்களை மட்டுமல்ல தனது மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து ஏனைய அடிப்படைத் தேவையையும் வழங்கமுடியாத நிலையில் இருக்கின்றது.

ஐக்கியஅமெரிக்காவின் இராணுவக்குவிப்பின் மத்தியில் Financial Times பத்திரிகை ஈராக்கின் பேரழிவுக்குள்ளாக்கும் ஆயுதங்களை செயலற்றதாக்குவதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கியநாடுகள்சபையின் குழுவினது தலைவர் கூறியதாக பின்வருமாறு செய்தி வெளியிட்டது. "குவைத்திற்கோ அல்லது இப்பிராந்தியத்தின் ஏனைய எந்த நாட்டிற்கு எதிராகவோ ஆயுதங்களை பாவிக்கக்கூடிய நிலையில் ஈராக் இல்லை."

அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கையை வாய்ப்பாட்டு பாடும் அமெரிக்க பத்திரிகைகள் ஈராக்கினால் ஒரு இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொள்ள முடியாது என்பதை தட்டிக்கழித்து சதாம்குசேன் ஒரு விசர்மனிதன் அவர் எதையும் செய்யக்கூடியவர் என படம்பிடித்துக்காட்டின. குவைத்தின் எல்லையை மீறியது என்பதற்கும் மிகக்குறைவாக ஈராக் ஐக்கியநாடுகள் சபையின் தீர்மானங்களில் ஒன்றைக்கூட மீறவில்லை. எப்படியாயினும் நாட்டின் இறைமையை முழுமையாக களைந்துவிட்ட ஐக்கியநாடுகள் சபையின் கோரிக்கைகளை தண்டிக்கும் நோக்கத்தில் ஈராக்கின் ஆட்சியாளர்கள் முனைந்திருந்தனர். ஈராக்குடன் மீண்டும் பொருளாதார உறவுகளை உருவாக்க முயலும் முதலாளித்துவ நாடுகள் ஐக்கியநாடுகள் சபையின் நிபந்தனைகளுக்கு அது அடிபணிந்திருப்பதை சுட்டிக்காட்டின. அத்துடன் பொருளாதாரத் தடைகளை விசேடமாக எண்ணெய் விற்பனை தொடர்பான வர்த்தகத் தடைகளை நீக்குமாறு கோரிக்கை விடுத்தன.

ஈராக் அசாதாரணமான இராணுவபயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததால் அது இந்த பொருளாதார தடைகளிலிருந்து விடுபடுவதற்காக அழுத்தம் கொடுக்கும் ஒரு விரக்தியடைந்த வளங்கெட்ட நடவடிக்கையாகும். வாசிங்டன் இந்தச்சந்தர்ப்பத்தை தனது சொந்த ஆக்கிரமிப்பினை மேற்கொள்வதற்கான கூட்டாகப் பாவித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் பொருளாதாரத் தடைகளை தொடர்ந்தும் வைத்திருப்பதுடன் இந்தப் பிராந்தியத்தில் தனது ஆளுமையை விரிவுபடுத்துவதிலும் தீர்மானமாக இருக்கின்றது. இந்தக்கொள்கைக்கு எதிரான அனைத்துக் கண்டனங்களும் விசேடமாக பிரான்சு, ரஷ்யாவினது அமெரிக்க உத்தியோகத்தர்களின் கண்டனத்திற்குள்ளாக்கப்பட்டது.

### பிரான்சிலிருந்து எதிர்ப்பு.

ஒக்டோபர் 12ம் திகதி பிரசுரித்த கட்டுரையொன்றில் Le Monde தினசரிப் பத்திரிகை இந்தப் பிராந்தியத்தில் பிரான்சினது சுயாதீனமான தலையீடு இல்லாததையிட்டு குறைப்பட்டுக்கொண்டது. "ஈராக், குவைத்




*மார்கழி 1990ல் ஐக்கியஅமெரிக்காவில் தொழிலாளர்கழகம் வளைகுடா யுத்தத்திற்கு முன்னர் யுத்தத்திற்கு எதிரான வாக்கெடுப்பை முன்வைத்து கலந்துகொண்ட ஊர்வலம்.*

எல்லையிலிருந்து வெளிவரும் அமெரிக்கத் தகவல்களின் சரியான தன்மையை அறிந்துகொள்ள அதற்காகப் போட்டியிட முடியாத நிலைமையில், பிரெஞ்சு உத்தியோகத்தர்கள் அமெரிக்க உளவு விண்கலங்களாலும், விமானங்களாலும் வழங்கப்படும் தகவல்களை பொற்காசு என ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என" இந்தப் பத்திரிகை பரிதவித்துக்கொண்டது. தொடர்ந்து ஐக்கியஅமெரிக்காவில் ஈராக்கிற்கு மேல் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கணடுபிடிப்புகள் எனத் தெரிவித்ததுடன், ஆகக்குறைந்தது ஒரு பகுதியிலாவது 1994 தேர்தல்களில் கிளிங்டனின் செல்வாக்கை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டவை என இப்பத்திரிகை மறைமுகமாகக் குற்றம் சாட்டியது.

வாஷிங்டன் முதலில் ஈராக்கின் முழுத்துருப்புக்களையும் நாட்டின் தெற்குப்பகுதிக்குள் அடைத்து வைத்திருப்பதற்கான ஆத்திரமூட்டல்களுக்கு சர்வதேசரீதியான ஆதரவைத் தேடியது. இந்த முயற்சி தோல்வியடையவே விசேட துருப்புக்களான Republican Guard பிரிவினை இந்தப் பிராந்தியத்தில் தடைசெய்ய கோரிக்கை விடுத்தது. அதுவும் நிராகரிக்கப்பட பக்தாத் தனது துருப்புக்களின் அசைவினைப்பற்றி இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அறிவித்தல் தரவேண்டும் என முன்மொழிந்தது. இதுவும் தோல்வியடைய இறுதியில் ஈராக்கின் துருப்புக்களின் நடமாட்டத்தினைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை ஐக்கியநாடுகள்சபையின் பாதுகாப்புக்குழுவில் நிறைவேற்றியது. அத்துடன் எதிர்காலத்தில் ஈராக்கிற்கு எதிரான தலைப்பட்ட இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொள்ளும் எனவும் அறிவித்தது.

ஈராக்கின் தெற்குப் பகுதியிலிருந்து அதனது துருப்புக்களை முழுமையாக வெளியேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சிலர் தாங்கள் சிட்டி சிறுபான்மையினோரின் ஆயுதக்கிளர்ச்சிக்கு எதிராக ஒரு "முற்போக்கான" பாத்திரத்தை வகிப்பதாக தெரிவித்தனர். வெளிநாட்டுக்கொள்கை விமர்சகர்கள் பலர் பக்தாத் ஆட்சியின் வீழ்ச்சியும், ஈராக்கினைத் துண்டுபோடுவதும் வளைகுடாவில் ஏகாதிபத்திய நலன்களுக்கெதிராக ஈரானின் செல்வாக்கினை அதிகரிக்கும் என எச்சரிக்கை செய்தனர். இந்த விடயங்கள் ஈராக்கின் சர்வாதிகாரிக்கு எதிராக ஐக்கியஅமெரிக்கா படைதிரட்டும் சிடுமூஞ்சித் தனத்தினை அம்பலத்திற்கு கொண்டுவருகின்றது.

வளைகுடாவில் வாஷிங்டன் என்னத்தைத் தேடுகின்றது? பாரசீகவளைகுடாவில் முதல்தரமாக அமெரிக்கா போருக்குச் சென்றது. "ஈராக்கின் ஆக்கிரமிப்பை" தோற்கடிக்கவோ அல்லது "சின்ன குவைத்தினைப்" பாதுகாக்கவோ இல்லை. பதிலாக இந்தப்பிராந்தியத்தின் பிரதானமான எண்ணெய் வளங்களின் மேலான அமெரிக்க பலதேசியநிறுவனங்களின் இரும்புப் பிடியை வலியுறுத்துவதற்காகவே.

### வளைகுடாவில் ஒரு நிரந்தரப்படை.

இந்தக் கட்டுப்பாட்டினை நிலைநிறுத்துவதற்காக நிரந்தரமாக படைகளை வளைகுடாவில் நிலைகொள்ள வைக்க அமெரிக்கா முயற்சி செய்கின்றது. இந்த இலக்கானது "பாலைவனப் புயல்" இராணுவ நடவடிக்கையின் முடிவில் சவூதிஅரேபியாவின் எதிர்ப்பினால் நிராகரிக்கப்பட்டது. ஈராக்கினால் மீண்டும் ஆபத்து என்ற தற்போதைய கண்டுபிடிப்பானது சவூதிஅரேபியாவின் இந்த எதிர்ப்பை முகம்கொடுக்க உருவாக்கப்பட்டது.

இரண்டாவதாக இந்த நேரத்தில் ஈராக்கிற்கு மேலான பொருளாதாரத் தடைகளை நீக்க

படிப்பகம்

www.padippakam.com



வாஷிங்டன் விரும்பவில்லை. இந்தத் தடைகள் தொடர்வது மரணமாவோரின் தொகையையும், மக்களின் துன்பங்களையும் அதிகரிக்கும். அத்துடன் குழந்தைப் பிள்ளைகளின் மரணங்களையும், நோயையும், பட்டினியையும் பெருக்கும். எப்படியிருப்பினும் இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மூலோபாய லாபநலன்களுக்கு சிக்கல் வருமிடத்தில் ஒரு பிரச்சினையல்ல.

ஈராக் மீண்டும் எண்ணெயை ஏற்றுமதி செய்யும் என்ற எதிர்பார்ப்பு எண்ணெய் விலை வீழ்ச்சியில் ஒரு பிரதானமான பாத்திரத்தை வகிக்கின்றது. எண்ணெய் விலைவீழ்ச்சியானது இந்தப்பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கு பிரதானமாக முதலிடும் குவைத், சவூதிஅரேபியா, வளைகுடாஅரசுகள் போன்றவற்றின் மீது மேலதிக பொருளாதார அழுத்தங்களை சுமத்துகின்றது.

இறுதியான வளைகுடா யுத்தத்திற்கு சவூதிஅரேபியா அதனது கிடைக்கக்கூடிய முழுஇருப்புக்களையும் தாரைவார்ப்பதன் மூலம் 60 பில்லியன் டொலர்களை செலவு செய்தது. குவைத்தின் மன்னராட்சி அதனது அரைவாசி சொத்துக்களுக்கு பெறுமதியான 47 பில்லியன் டொலர்களை அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கு செலவு செய்தது.

குவைத்தினது தற்போதைய இராணுவச் செலவீனம் அதனது எண்ணெய் விற்பனை வருமானத்தின் 70 வீதமாகும். இதில் பெரும்பான்மையான தொகை அமெரிக்க ஆயுதநிறுவனங்களின் பெட்டிக்குள் சென்றடைகின்றது.

தற்போதைய நெருக்கடியைப் பாவித்து வாஷிங்டன் குவைத், சவூதிஅரேபியா வளைகுடாஅரசுகளை இந்தப் பிரதேசத்தில் நிரந்தரமாக அமெரிக்க இராணுவத்தை நிறுத்துவதற்கான செலவினை ஏற்க கோரிக்கையை விடும் அதேசமயத்தில் ஈராக்கின் எண்ணெயால் உருவாகும் போட்டியினால் இந்த அரபு மன்னராட்சிகள் தொடர்ந்தும் பணம் செலவிடும் நிலைமையை சீர்குலைக்கும் என்பதையிட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது.

## ஏகாதிபத்திய நலன்களின் முரண்பாடுகள்

அடித்தளத்தில் ஐக்கியஅமெரிக்காவின் பிரச்சினை யார் இந்த எண்ணெய் விற்பனைத்தடையை நீக்குவதன் மூலம் லாபமடையப் போகின்றார்கள் என்பதில் தங்கியிருக்கின்றது. தடைகளை நீக்கும்படியான கோரிக்கை பிரான்சு, ரஷ்யா, துருக்கியினால் பலமாக முன்வைக்கப்படுகின்றது. இந்த நாடுகளுக்குப் பின்னால் ஏனைய ஐரோப்பியர்களும், ஆசியாவின் சக்திவாய்ந்த நாடுகளும் ஐக்கியஅமெரிக்கா இந்தப் பிரதேசத்தின் வளங்களின் பெரும் பங்கினை சொந்தமாக்கிக் கொண்டதையிட்டு உருவாகிய அதிதிருப்தியுடன் நிற்கின்றன.

ரஷ்யா தனது வருமானம் மிக்க இராணுவத் தளபாட விற்பனையை ஈராக்குடன் மீண்டும் புதிப்பித்துக்கொள்ள முயல்வதுடன், பழைய சோவியத்யூனியனிற்கு ஈராக்கின் ஆட்சியாளர்கள் கொடுக்கவேண்டிய பல பில்லியன் டொலர்களில் ஒரு சிறு பகுதியைத் தன்னும் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. துருக்கி தனது பங்கிற்கு தனது பிரதேசங்களினூடான எண்ணெய் குழாய்த் திட்டத்தினைப் புதுப்பிப்பதன் மூலமாக லாபத்தினைப் பெற்றுக்கொள்வதுடன் ஈராக்கினது உதவியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இரு நாடுகளினதும் பொது எல்லைகளுக்கப்பாலான குர்டிஷ் எழுச்சியினை அடக்க முயற்சிக்கின்றது.

பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதுடன் ஈராக்குக்குள் நுழைவதற்கான திட்டங்களை எற்கனவே பிரான்சு முதலாளித்துவம் போட்டு வைத்துள்ளது. இதன் அடித்தளத்தில் யூன் மாதத்தின் முடிவில் பாரிய பிரெஞ்சு நிறுவனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட பிரெஞ்சு முகாமையானர்கள் சபையின் பிரதிநிதிகள் பக்தாத்தில் கூட்டுவர்த்தகத்தைப் பற்றிய பேச்சுவார்த்தைகளை நடாத்தின. இதற்கும் மேலாக Total , Elf Aquitaine என்ற பிரான்சின் பிரதானமான எண்ணெய் நிறுவனங்கள் எற்கனவே ஈராக்கின் எண்ணெய் தொழிற்துறையை நவீனமயமாக்கவும், புதிய எண்ணெய்க் கிணறுகளை தோண்டவுமான ஒப்பந்தங்களைச் செய்துள்ளன.

பிரெஞ்சு அரசாங்க உத்தியோகத்தர்கள் வளைகுடாவில் அமெரிக்காவின் இராணுவக்குவிப்பு பற்றி விரோதமான. கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள். உதாரணத்திற்கு பிரான்சின் வெளிநாட்டு மந்திரி Francois Leotar இந்த இராணுவக் குவிப்பானது அமெரிக்காவின் "உள்நாட்டு அரசியலுடன் சம்பந்தப்பட்டது அல்ல. ஈராக்குக்குள் ஈராக் துருப்புக்களின் நடமாட்டத்தில் எந்தவித சட்டவிரோதமும் இல்லை" எனத் தெரிவித்தார். இதனை அமெரிக்க உத்தியோகத்தர்கள் பிரான்சின் ஈராக்குடனான வர்த்தக உறவுகளை சுட்டிக்காட்டி கண்டித்தனர்.

பாரசீகவளைகுடா மட்டும்தான் அமெரிக்க, பிரான்சு நலன்கள் முட்டிமோதும் பிரதேசம் என்றில்லை. ஒக்டோபர் மாதத்தின் Le Monde Diplomatique "ஆபிரிக்கக் கண்டத்தின் மீதான கண்ணியமற்ற போட்டி– அமெரிக்காவின் பசியும், பிரான்சின் இரட்டைவேடமும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தது. இது எப்படி அமெரிக்காவும், பிரான்சும் தங்களுடைய நலன்களை ராவுண்டா, சூடான், அல்ஜீரியா, லிபேரியா போன்ற நாடுகளின் மீது நிலைநிறுத்துவதற்கான பினாமி யுத்தங்களை நடாத்துகின்றன என்பதை விபரித்தது.

"கறுப்பு ஆபிரிக்காவின் மீது பிரான்சிற்கும், அமெரிக்காவிற்கும் இடையேயுள்ள போட்டியானது வெறுமனே பிரான்சு மொழிபேசும் பிரதேசங்களை ஆங்கிலோ–சக்கன் கலாச்சார இராசதந்திர செல்வாக்கிலிருந்து பாதுகாப்பதில்மட்டும் தங்கியிருக்கவில்லை." என்று இக்கட்டுரை குறிப்பிட்டது. தொடர்ந்து "இது எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதார நலன்கள் விசேடமாக எண்ணெய் பிரான்சிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான ஆபிரிக்கா தொடர்பான குத்துவெட்டுக்களின் பின்னணியிலுள்ளது.இதற்கு பிரெஞ்சு நிறுவனமான Elf Aquitaine ற்கும் அமெரிக்க நிறுவனமான Occidental Petroleum ற்கும் இடையில் கொங்கோவில் நடாத்தப்பட்ட ஆயுதப்பலப்பரீட்சை மிகவும் தெளிவான ஓர் உதாரணமாகும்." என்று எழுதியது.

வளைகுடாவின் தற்போதைய நெருக்கடியானது ஆபிரிக்காவில் தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் இரத்தம்தோய்ந்த உள்நாட்டு யுத்தத்தைப் போன்று அடித்தளத்தில் பெரிய முதலாளித்துவ நாடுகளின் சந்தைக்கும், மூலப்பொருட்களுக்கும், குறைந்த கூலியுழைப்பிற்குமான போட்டியிலிருந்தே உருவாகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது தனது எஞ்சியிருக்கும் இராணுவ மேலாதிக்கத்தினை கூடுதலாக தனது தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடியைச் சமப்படுத்த முயல்கின்றது. இதற்காக உலகின் மிகமுக்கிய பிரதேசங்களையும், வளங்களையும் தனது போட்டியாளர்களான ஐரோப்பாவினதும், ஜப்பானினதும் செலவில் கட்டுப்படுத்துவதற்கு முயல்கின்றது. வாஷிங்டனின் போட்டியாளர்கள் தங்களது பொருளாதார பலத்தின் அடிப்படையில் இராணுவ சக்திகளை அணிதிரட்டும் சந்தர்ப்பத்தில் இந்தக்கொள்கையானது பாரிய மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தொழிலாளவர்க்கம் பாரசீகவளைகுடாவில் இராணுவக்குவிப்பினை ஒரு எச்சரிக்கையாக விளங்கிக்கொள்ளவேண்டும். தற்போதைய இந்த முரண்பாடுகள் நாளைய மோசமான போர்களுக்கு தளம் அமைக்கின்றன. இந்தப் பேரழிவிற்குள் இழுத்துச்செல்லப்படாமல் இருப்பதற்கான ஒரேவழி தொழிலாளர்கள் அமெரிக்க முதலாளித்துவத்திற்கெதிராக சுயாதீனமாக அணிதிரள்வதிலேயே தங்கியிருக்கின்றது.

# பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையின் பின்னணியில்.



*சந்திரிக்கா பண்டாரநாயக்கா*

தமிழீழவிடுதலைப்புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடன் பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்படுத்தப் போகும் கூட்டு, சிங்கள,தமிழ் தேசியஇனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இராணுவ–பொலிஸ் தாக்குதலை நடாத்தும் பிற்போக்குத்திட்டத்தின் ஒரு பாகமாகும் என புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம் எச்சரிக்கின்றது.

பியகம சுதந்திரவர்த்தகவலையத்தின் நிராயுதபாணிகளான தொழிலாளர் கூட்டத்துக்கு பொலிசாரைக் கொண்டு கண்ணீர்புகை தாக்குதல் நடாத்தி, துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் மூலம் பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத கயமைத்தனம் ஏற்கனவே அம்பலத்துக்கு வந்துள்ளது.

செப்டம்பர் 5ம் திகதிய இந்தப்பொலிஸ் தாக்குதல்– விடுதலை இயக்கத்தலைவர் பிரபாகரன் யுத்தப்பிரகடனம் செய்த ஒரு சில மணித்தியாலங்களுள் இடம்பெற்றது தற்செயலானது அல்ல. சமசமாஜ–ஸ்டாலினிச தலைவர்களின் நேரடிப் பங்களிப்புடனும் நவசமசமாஜ உட்பட்ட தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் ஆதரவுடனும் அமைக்கப்பட்டுள்ள பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கத்துக்கு தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கைநீட்டி அடிப்பதற்குத் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களுடனான கூட்டு அவசியமாகியுள்ளது.

தொழிலாளர்வர்க்கப் போராட்டங்களுக்கு எதிராக அரச பயங்கரத்தினைக் கட்டவிழ்த்து விட்டு, முழுத்தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களையும் நசுக்கித்தள்ளும் எதிர்ப்புரட்சிப் பணியில் முன்னைய யூ.என்.பி ஆட்சியைப் போலவே பொதுஜனமுன்னணி அரசாங்கமும் முகம் கொடுத்துள்ள பாரதூரமான பிரச்சினை அரச ஆயுதப்படைகளில் பெரும் பங்கினர் வடக்கில் இனவாதயுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதேயாகும். தமிழ் மக்களின் இரத்தத்தினை உறிஞ்சிய இந்த மக்கட்படுகொலைப் படைகளை தென்மாகாணங்களுக்குத் தருவித்து தொழிலாளர்கள், ஏழைகள், இளைஞர்களை இரத்தவெள்ளத்தில் மூழ்கடிக்காமல் முதலாளித்துவ ஆட்சியின் ஸ்திரப்பாட்டினை ஊர்ஜிதம் செய்யவோ அல்லது பலதேசிய கூட்டுத்தாபனங்களுக்கு அவசியமான அடிமை உழைப்பை வழங்கும் நிலைமைகளை சிருஷ்டிக்கவோ முடியாது என்பதை ஆளும்வர்க்கம் அறியும்.இந்தப்பணியில் ஏற்கனவே வடக்கிலும் ஓரளவுக்கு கிழக்கிலும் தமிழ்மக்கள் மீது நானாவிதமானதும், அளப்பரியதுமான ஒடுக்குமுறைகளைதிணித்துள்ள

விடுதலைப்புலிகளதும் முதலாளித்
கைக்கூலிப்படைகளாக தொழிற்படும் E
PLOTபோன்ற அமைப்புக்கள
உதவிகளைப் பெற்றுக்கொ
பொதுஜனமுன்னணி அரசாங்
முடிவுசெய்துள்ளது.

### வேலைப்பகுப்புத்திட்டம்

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேர்
அநுருத்த ரத்வத்த வடக்கில் நிறுத்தப்பட்
ஆயுதப்படையினரின் முன்னிலையில் பேசுை
இந்த வேலைப்பகுப்புத்திட்டத்தின
பின்வருமாறு குறிப்பிட்டார்:

"நாம் அடிமேல்அடிவை
முன்செல்வதோடு தீர்வுக்கான அறிகுறி மி
நன்றாக உள்ளது. எனினும் கடந்தகால
இழைத்த எந்தவிதமான தவறையும்
செய்யமாட்டோம். இல்லை. அரசாங்கத்தி
அதிகாரம் வழங்கப்படாத எவரும் ஆ
தாங்க நாம் அங்கீகாரம் வழங்கமாட்டோம்.
அர்த்தம் உங்களுக்கும், பொலிசுக்கும்
அதிகாரம் வழங்கப்படும் என்பதாகும்.
அரசாங்கத்தின் உறுதி
தீர்மானமாகும்".படைகளுக்கு மத்தி
"உங்களுக்கும், பொலிசுக்கும் ஆ
வைத்திருக்க அதிகாரம் வழங்கப்படும்"
கூறும்போது பழைய கேர்ணல்
விடயத்தை–அதாவது அது யாரின் பொ
என்பதைத் தெளிவுபடுத்தவில்லை.

ஜனாதிபதி பிரேமதாச ஆட்சிக்
விடுதலைப்புலிகள் அமைப்புக்
இடையேயான சமரசம் தகர்ந்து போன
வடக்கு–கிழக்கில் பொலிஸ் அதிகாரங்க
பிரபாகரனின் அமைப்புக்கு கையளிப்
சம்பந்தமாக ஏற்பட்ட இழுபறியே கார
என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அ
அவ்வாறே அப் பேச்சுவார்த்தைகள் தகர்
போனதற்கு காரணமான முதலாவது மோத
இலங்கைப் பொலிசாருக்கும் அம்மாக
மக்களுக்கும் இடையேயான போராட்ட
தலை நீட்டியதும் தற்செயலானது அல்ல
"கடந்தகாலத்தில் இழைத்த தவ
செய்யமாட்டோம்" என ரத்வத்த வழங்
வாக்குறுதியில் இந்த விடயம் நிச்
அடங்கியுள்ளது.

### அனைத்துலக தோற்றப்பாடு

அவ்வாறே வடக்கில் பொல
அதிகாரங்களை விடுதலைப்புலி
அமைப்புக்கும் மற்றும் தமிழ் முதலாளித்
அமைப்புக்களுக்கும் வழங்கும் திட்
அனைத்துலக ரீதியில் ஏகாதிபத்தியவாத
இப்போது ஸ்தாபிதம் செய்து வரும் பிற்போக்

தொடர்ச்சி மறுபக்க

படிப்பகம்

www.padippakam.com



# துஜன முன்னணி அரசாங்கத்துக்கும், நலைப்புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையின் னணியில்.

றைக்குப் பெரிதும் இணங்கியது. ப்பற்றி கவனம் செலுத்துவது தமானது.

ஸ்ரேலினுள் யூதர் தொழிலாளர்களைப் பாலஸ்தீன தொழிலாளர்களும் பல்வேறு ட்டங்களுக்கும் பொது லநிறுத்தப்போராட்டங்களுக்கு மையும், இஸ்ரேலுக்கு வெளியே அரபு ங்களில் யூத முதலாளிகளுக்கு முதலீட்டு க்களை வழங்கும் அவசியத்தினாலும் கப்பட்ட சியோனிச ராபின் ஆட்சி தீன விடுதலைஇயக்கத்துடன் படிக்கைக்குச் சென்றதோடு அந்த படிக்கையின்படி காஸா கரையில் .ஓவுக்கு பொலிஸ் ாரங்களைக்கொண்ட ஆட்சிப் பங்களை வழங்க முடிவுசெய்தது.

இன்ரிபாடா இயக்கம் போன்ற தொழிலாளர், ஞர் இயக்கங்கள் வளர்ச்சிகண்டு, ரபாத்தின் விடுதலைஇயக்கம் டுவதன் முதலாளித்துவ அரசியல் மையைச் சவாலுக்கு உள்ளாக்கியது. த்தொடர்ந்து பி.எல்.ஓ அமெரிக்க பதிமாளிகையின் றோசா தோட்டத்தில் பில் னின் எதிரில் அடிபணியவும் இஸ்ரேல் னிசத்துடன் கூட்டுக்குச்செல்லவும் செய்தது. முதலாளித்துவ விடுதலை இயக்கங்களின் அரசியல் ரோத்தினையும் பிற்போக்கினையும் நன்கு காட்டிய இந்த இஸ்ரேல்–பீ.எல்.ஓ படிக்கையின் கீழ் இப்போது காஸா ல் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை நவதே பீ.எல்.ஓ பொலிசாருடன் ர்த்து செய்யும் இஸ்ரேல் இராணுவத்தின் மக்கட் படுகொலை வேலைத்திட்டத்தில் ம் செய்கின்றது. இன்றைய உலக மையின் கீழ் சியோனிச இஸ்ரேல் ியாளர்களும், பீ.எல்.ஓவும் தாம் கொடுத்துள்ள அரசியல் நெருக்கடிக்கு பத் தேடிக்கொண்டு பாலஸ்தீன, யூத ளர்–ஒடுக்கப்படும் மக்களை இரத்தத்தில் டிக்கும் கூட்டில் இறங்கியிருப்பது விதத்திலேயே.

இலங்கையில் தெற்கில் போலவே கிலும் முதலீடுகளையும் அவற்றிலான த்தையும் காக்கும் பொருட்டு ஏகாதிபத்திய சிய கூட்டுத்தாபனங்கள் 'அரசியல் ப்பாட்டை' எதிர்பார்க்கின்றன. இந்த பல் ஸ்திரபாட்டின் அர்த்தம் என்ன? ின் ஏனைய இடங்களைக்காட்டிலும் ந்த செலவில் உபரிப்பெறுமானத்தை வதற்கான நிலைமைகளை ஸ்தாபிதம் தே. இதற்குத் தொழிலாளர்–ஒடுக்கப்படும் ள் அனுபவிக்கும் அனைத்து நலன்புரிசேவைகளை வெட்டியும் ற்றைக் காப்பதற்கு அவர்கள் படுத்தக்கூடிய சகல ஜனநாயக மகளை ஒழித்துக்கட்டியும் தொழிற்படும் சிமுறையை ஸ்தாபிதம் செய்வது பத்தியவாதிகளுக்கு அவசியமாகியுள்ளது. பத்தியத்தின் ஆசீர்வாதங்களின் கீழ் ாஜ–ஸ்டாலினிச–நவசமாஜ தலைவர்களின் லத்துடன் பொதுஜனஐக்கியமுன்னணி ாங்கத்தை ஆட்சிக்குக் ணர்ந்துள்ளதும், விடுதலைப்புலிகள் ட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடன் க்காக இப்போது நடவடிக்கைகள் பெறுவதும் அந்த அவசியத்துக்கு



*1994 ம் ஆண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம்.*

இணங்கவேயாகும். யுத்தத்தினை நிறுத்தும் தோரணையில் இந்த பிற்போக்குக் கூட்டுக்கான துரும்புகள், 'அவுஸ்திரேலியத்திட்டம்' 'கனேடியத்திட்டம்', 'பிரித்தானியத்திட்டம்' என்ற எண்ணற்ற வடிவங்களில் ஏற்கனவே ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்து போகக் கூடாது. சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ:தோ.கா தலைவர்களும், பாலாதம்பு உட்பட்ட சகல தொழிற்சங்க அதிகாரிகளும் இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பூகோளரீதியான உற்பத்திமுறையையும், அடிமை உழைப்புச்சுரண்டலையும் ஊர்ஜிதம் செய்யும் நடவடிக்கைக்கு தோள்கொடுத்துள்ளனர். அரசியல்ரீதியில் வங்குரோத்து அடைந்துபோன தமிழ்தேசிய விடுதலைப்புலிகள் அமைப்பு உட்பட்ட சகல முதலாளித்துவ அரசியல் அமைப்புக்களும் இணக்கம் தெரிவித்துள்ளது இந்த வேலைத்திட்டத்துக்கே.

யூ.என்.பியினால் ஆரம்பிக்கப்பட்ட இனவாதயுத்தம் நிறுத்தப்படவேண்டும். தமிழ் மக்களை அவர்களது காணி,நிலங்களில் இருந்து வெளியேற்றவும் படுகொலை செய்யவும் ஈடுபடுத்தப்பட்டுள்ள முதலாளித்துவ அரசபடைகள் வடக்கு–கிழக்கிலிருந்து உடன் வாபஸ்பெறப்படவேண்டும் . இதற்காகப் புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம் தொடர்ந்து பிரச்சாரம் செய்தது. இனவாதயுத்தத்தினை தமது வேலைத்திட்டமாக்கிக்கொண்ட யூ.என்.பி, சி.ல.சு.க மற்றும் முதலாளித்துவ அரசியல்கட்சிகளுக்கு எதிராக சிங்கள–தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்தின் அடிப்படையிலான ஒரு சுயாதீன அரசியல்இயக்கத்தினை இலங்கை–தமிழ்ஈழம் சோசலிசக்குடியரசின் முன்னோக்கின் அடிப்படையில் அணிதிரட்டுவது அந்தப்பிரசாரத்தின் அர்த்தமாக விளங்கியது.

சமசமாஜ–கம்யூனிச–நவசமசமாஜ– இ.தொ.கா தலைவர்களும், சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் அந்த வேலைத்திட்டம் பொதுஜனங்களிடையே வேரூன்றுவதைத் தடுக்க முழுமூச்சாகத் தொழிற்பட்டனர். வடக்கு–கிழக்கில் இடம்பெற்றுவந்த மக்கட்படுகொலை சம்பந்தமாக இத்துரோகிகள் வாய்திறந்தால் அதனை அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான நச்சுத்தனமான பிரச்சாரத்தின் ஊடாக சிங்கள இனவாதத்தினைப் பராமரிக்கவும், முதலாளித்துவ அரசபடைகள் உட்பட்ட ஒடுக்குமுறை இயந்திரத்தினைக் கலைப்பதை இலக்காகக் கொண்ட வெகுஜனஇயக்கம் கட்டியெழுப்பப்படுவதைத் தடைசெய்யவுமே நடாத்தினர். இது முதலாளித்துவ சி.ல.சு.க. தலைமையில் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களுடன் உருவாக்கிக் கொள்ளும் கூட்டின்மூலம் சிங்கள–தமிழ் தேசியஇனங்கள் இரண்டினதும் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை மிலேச்சமான முறையில் ஒடுக்கித் தள்ளும் பிற்போக்குத்திட்டத்தினை அமுல் செய்யவே வழிவகுத்தது.

## இத்தகைய கூட்டின் அவசியம் என்ன?

முதலாளிவர்க்கத்திற்கு இத்தகைய ஒரு கூட்டும் திட்டமும் அவசியப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உள.

1. இனவாத யுத்தத்துக்காகத் தூண்டிவிடப்பட்ட மத்தியதரவர்க்க, குட்டிமுதலாளித்துவத் தட்டினர் 11 வருடகால யுத்தத்தினால் சலித்துப்போனமை. யுத்தத்தினால் தமக்குப் புதிய வருமானவழிகள், சீவனோபாயங்கள் பலவும் கிடைக்கக் கூடியதாய் இருந்ததால் இந்த சமூகத்தட்டினர் இனவாத சன்னியின் சவுக்கடி காரர்களாக ஆரம்பத்தில் செயற்பட்டனர் தமிழ் தேசிய இனத்தினர் மனிதப்படுகொலைகள் மூலம் ஒழித்துக்கட்டப்படின் தமது வயிற்றுமாரி ஜீவனோபாயத்தினை குறைந்தபட்சப் போட்டியுடன் நடாத்திச்செல்ல முடியும் என இவர்கள் கணக்குப் போட்டனர். இந்தப் பிரிவினர் யூ.என்.பி, சி.ல.சு.க., ம.ஐ.மு பின்னாலும் அவ்வாறே பாசிச ஜே.வி.பி.யை 'சூழவும் தேசத்தினை மீட்பதன் பேரில் அணிதிரண்டனர். எனினும், யுத்தம் நீண்டு செல்கையில் அவர்களுக்குக் கிட்டியது எதிர்பார்த்த வாய்ப்புக்கள் அல்ல. மிகமோசமான பொருளாதார சுமைகளும், அடக்குமுறைகளும், சவப்பெட்டிகளில் கிராமங்களுக்கு வந்தடைவதுமே. அலுகோசு வேலைக்கென இராணுவத்தில் சேர்ந்தவர்கள்–சாதாரண படையாட்கள் மட்டுமன்றி அதிகாரிகளும் கூட இராணுவத்தை விட்டு ஓட்டம் பிடிப்பது ஒரு மாதத்துக்கு பல்லாயிரமாக உயர்ந்துகொண்டு வந்தது. இது இந்தச் சமூகத் தட்டினரிடையே வளர்ச்சிகண்ட அவஸ்தை நிலையையும், யுத்த சலிப்பையும் சுட்டிக்காட்டியது. யுத்தத்தினைத் தொடர்ந்து முன்னெடுக்கும் சுலோகத்தின் கீழ் தேர்தலுக்கு நின்ற யூ.என்.பிக்கும், எம் ஈ.பிக்கும் கிடைத்த தேர்தல் தோல்வி எல்லாவற்றுக்கும் மேலாக இந்த யுத்த சலிப்பை வெளிக்காட்டியது.

இனவாதத்தினால் தூண்டப்பட்ட இந்த இனவாத அடிப்படை ஆட்டம் கண்டு போனமை முதலாளித்துவ ஆட்சிக்கும், அரசுக்கும் பெரும் ஆபத்தை உண்டுபண்ணியது. இராணுவத்தளபதிகளும் அந்த ஆபத்தினைப் புரிந்து கொண்டிருந்ததாக தெரிய வந்தது. பொதுத்தேர்தலின் பின்னர் சிறுபான்மை யூ.என்.பி. அரசாங்கம் அமைக்கப்படுமானால் அதைப் பாதுகாக்க முடியுமா என ஆகஸ்ட் 18ம் திகதி ஜனாதிபதி விஜயதுங்க அவர்களிடம் விசாரித்தார். அதைச் செய்ய முடியாது என இராணுவ–பொலிஸ் அதிபர்கள் கூறியதன் மூலம் இது அம்பலமாகியது. வடக்கில் இனவாத யுத்தத்தினை நடாத்திவரும் அதேவேளையில் அங்கு தோல்விகளுக்கு முகம் கொடுக்கையில் தெற்கில் எழுச்சிகாணும் கிளர்ச்சிகளை நசுக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இராணுவத்தளபதிகளுக்கும் பெரும் புத்திக்கூர்மை அவசியமில்லை. அத்தகைய ஒரு நிலைமையிலேயே பொதுஜனமுன்னணியிடம்

படிப்பகம்

www.padippakam.com



அரசாங்கத்தை ஒப்படைக்கவும், பொதுஜனமுன்னணியைப் பயன்படுத்தி வடக்கில் ஒரு கூட்டினை உருவாக்குவதன் மூலம் தெற்கில் மக்கள் மீது முதலாளித்துவ அரசின் ஆளுமையை மீண்டும் நிறுவவும் ஆளும் வர்க்கம் தீர்மானம் செய்தது.

2. தொழிலாளவர்க்கத்தின் பல்வேறு பகுதியினரும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வர்க்க நடவடிக்கைகளுக்கு கிளம்பியமை. ஒரு இலட்சம் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தும், தொழிலாளர்களுக்கு எதிராக குண்டர் தாக்குதல் நடாத்தியும், தொழிற்சங்க அலுவலகங்களுக்கு 'சீல்' வைத்தும 1980களில் இருந்து யூ.என்.பி. அரசாங்கம் தீவிரமாக்கிய ஒடுக்குமுறையை சிதறடிக்கும் வகையில் தொழிலாளர் வேலைநிறுத்தங்களும் சட்டப்படி வேலை செய்யும் இயக்கமும், மறியல்களும் பரவின. 1993 கடைப்பகுதி தொடக்கம் வளர்ச்சிகண்ட இந்தப் போராட்டங்களின் எதிரில் பலவீனம் கண்ட விஜேதுங்க ஆட்சி 1994 மே தினத்தில் "சலுகைப்பொட்டலம்" வழங்கும் மோசடி மூலம் தொழிலாளர்களின் கண்களில் மண்போட எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை. தோட்டத்துறையிலும், நகர்ப்புறக் கைத்தொழில் பிராந்தியங்களில் மட்டுமன்றி சுதந்திரவர்த்தகவலையங்களிலும் தொழிலாளர்கள் தமது அமைப்புக்களை கட்டி எழுப்பி போராட்டங்களுக்கு கிளர்ந்தனர். ஏழு மாதங்களுக்கு முன்னரே பொதுத் தேர்தலை நடாத்த முடிவுசெய்ததும் கூட இந்தப் போராட்டத்தினை ஸ்தம்பிக்கச் செய்யவேயாகும். ஆனால் அதைச் சாதிக்க முடியாமல் போயிற்று. தேர்தல் காலத்தினைப் போலவே அதன் பின்னரும் தொழிலாளர்கள் தமது போராட்டுத்தை கைவிடாதிருக்க முடிவு செய்தனர்.

இந்தத் தொழிலாளர் போராட்டங்கள் ஆளும் வர்க்கத்தின் எதிரில் தோற்றுவித்த அரசியல் ஆபத்து பெரிதும் உக்கிரமானதுக்குக் காரணம் முதலாளிவர்க்கத்துக்கு முண்டுகொடுத்து வந்த மத்தியதரவர்க்க, குட்டிமுதலாளித்துவ சமூகத்தட்டினரது ஆதரவினை அது ஈர்த்துக்கொள்ளுமோ எனத் தோன்றியதுமேயாகும். வேலைத்தலக் கோரிக்கைகளின் பேரிலான போராட்டங்களை அரசியல் முன்னோக்கு இல்லாத தொழிலாளர் போராட்டங்களாக மாற்றுவதற்கு முதலாளித்துவச்சார்பு சகல அதிகாரத்துவங்களும் தொழிற்பட்டன. ஆனால் அதிகாரத்துவங்களின் ஆளுமை தகர்ந்துபோன நிலைமையின் கீழ் அதில் தொங்கித் தமது ஆட்சியின் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை ஆளும் வர்க்கம் பெரிதும் புரிந்துகொண்டு வருகின்றது.

குட்டிமுதலாளித்துவ சமூகத்தட்டினரது பண்புகளுக்கும், தொழிலாளர்வர்க்கப் போராட்டங்களுக்கும் இடையே இருந்துவரும் உறவுகளை ட்ரொஸ்கி பின்வருமாறு விபரித்தார்: "முதலாளித்துவத்தின் எழுச்சியினதும், வளர்ச்சியினதும், மலர்ச்சியினதும் சகாப்தத்திலும் குட்டிமுதலாளித்துவம் தனது கடுமையான அதிருப்தியின் வெடிப்புக்களுக்கிடையேயும் பொதுவில் முதலாளித்துவ கவசத்துடன் கீழ்ப்படிவுடன் பயணம் செய்தது, அதனால் செய்யக்கூடியது வேறெதுவும் இருக்கவில்லை. ஆனால் முதலாளித்துவத்தின் வெடிப்பினதும் பொருளாதார முட்டுச்சந்து நிலைமையின் கீழ் குட்டிமுதலாளித்துவம் பழைய எஜமானர்களதும், சமூக ஆட்சியாளர்களதும் விலங்குகளிலிருந்து விடுபட்டுச்செல்ல முயற்சிக்கின்றது. இலக்காகக் கொள்கின்றது. அது அதனது தலைவிதியை பாட்டாளிவர்க்கத்தின் தலைவிதியுடன் இணைத்துக்கொள்ளப் பெரிதும் திறமை வாய்ந்தது. அதற்கு ஒன்றுமட்டுமே அவசியப்படுகின்றது. பாட்டாளிவர்க்கம் ஒரு புதியபாதையில் சமுதாயத்தை இட்டுச்செல்லும் அதன் சக்தியில் குட்டிமுதலாளித்துவத்துக்கு நம்பிக்கை பிறக்கவேண்டும். தொழிலாளர்வர்க்கம் இந்த நம்பிக்கையை அதன் பலத்தினாலும், அதன் நடவடிக்கைகளின் உறுதியினாலும், எதிரிக்கு எதிரான ஒரு திறமைவாய்ந்த எதிர்த்தாக்குதலினாலும் அதன் புரட்சிகரக் கொள்கையின் வெற்றியினாலுமே பிறக்கச் செய்ய முடியும்." (ஜேர்மனி–1931–32 பக்கம்234)

தொழிலாளர்வர்க்கம் தொடர்பாக குட்டிமுதலாளித்துவத்தட்டினரிடையே நம்பிக்கை வளர்ச்சிகாண்பதற்கு முன்னரே சிறப்பாகத் துரோகத் தலைவர்களின் காட்டிக்கொடுப்பை புரிந்துகொண்டு தொழிலாளர் வர்க்கத்தினை புரட்சிகர வேலைத்திட்டத்தின்

> தமிழ்தேசியஇனத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வது சிங்கள அல்லது தமிழ்முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கீழ் இடம்பெற முடியாது. அதற்கு சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ அணிதிரட்டுவதன் மூலம் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசி சோசலிச வேலைத்திட்டத்திற்கு அர்ப்பணம் பூண்ட தொழிலாளர்- விவசாயிகளின் அடிப்படையிலான சோவியத்துக்களை நிறுவவேண்டும்.

மேல் ஸ்தாபிதம் செய்வதற்கு முன்னரே தொழிலாளர்வர்க்கத்தினை நசுக்கித்தள்ள இராணுவ, பொலிஸ்படைப் பிரிவுகளை வழிநடாத்த ஆளும்வர்க்கம் முடிவுசெய்துள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்புடனும் மற்றும் தமிழ்முதலாளித்துவக் கட்சிகளுடனும் கூட்டினை ஏற்படுத்துவதன்மூலம் வடக்கிலிருந்து இராணுவத்தைத் தருவிக்க முயற்சிப்பதற்கு அதுவே காரணம்.

இந்தப் பிற்போக்குத் திட்டங்களை வெற்றிபெறச் செய்யும் பொருட்டு சமசமாஜ–கம்யூனிஸ்ட்– நவசமசமாஜத் தலைவர்களை அரவணைத்துக்கொண்டு சந்திரிக்கா குமாரதுங்க இன்று கூறுவது என்ன? பொதுஜனஐக்கிமுன்னணி அரசாங்கத்துக்கு எதிராகத்தோன்றும் தொழிலாளர் போராட்டங்களை "வடக்குப்" பிரச்சினையை தீர்த்துவைக்கும் முயற்சியை" சிதறடிக்கும் நடவடிக்கை என்கின்றார். யுத்தத்தினால் அதிர்ந்து போயுள்ள குட்டிமுதலாளித்துவ, மத்தியதர வர்க்கங்களை மீண்டும் தொழிலாளவர்க்கத்திற்கு எதிராகத் தூண்டிவிடும் திசையில் இப்பேச்சுத் திருப்பப்பட்டுள்ளது. சுதந்திரவர்த்தகவலையத்தில் தொழிலாளர் போராட்டங்களினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திரும்பிச் செல்கின்றார்கள் எனவும் அது தேசியப்பொருளாதாரத்தை ஸ்தம்பிக்க வைப்பதாகும்' எனவும் இதனுடன் சேர்ந்து பொதுஜனமுன்னணித் தலைவர்கள் கூச்சலிடுகிறார்கள். பூகோளமயமான உற்பத்தி நடைமுறையில் ஈடுபட்டுள்ள ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு கதவுகளைத் திறந்துவிட்டுள்ள திறந்தபொருளாதாரக் கொள்கையானது தேசியப் பொருளாதாரத்துக்கு சாவுமணி அடித்துள்ளது. அதன் மூலம் இந்நாட்டுத் தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களை அடிமை உழைப்பாளிகள் ஆக்கியுள்ளது.இதுவே உண்மை நிலை. தெற்கிலும் அவ்வாறே வடக்கிலும் இந்த அடிமை உழைப்பு வலையங்களை அமைப்பதற்கு அவசியமான பரந்த ஒடுக்குமுறையினை சிங்கள– தமிழ் ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயான வேலைப்பகுப்பின் மூலம் இட்டு நிரப்புவதே பொதுஜனமுன்னணியின "வடக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்" திட்டத்தின் அர்த்தமாகும்.

### பாசிச படையணிகள்

இனவாத யுத்தத்தினால் சலித்துப்போயுள்ள மத்தியதரவர்க்க, குட்டிமுதலாளித்துவப் பிரிவினரை அணிதிரட்டி, பொதுஜனமுன்னணி அரசாங்கம் வடக்கின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேரில் செய்துவரும் இராணுவ– பொலிஸ் அரசதிட்டம் தோல்வி காணுமிடத்து அதற்குப் பதிலாக கதிகலங்கிப் போயுள்ள இந்த சமூகத்தட்டினரைப் பயன்படுத்தி திரும்பவும் இனவாத பாசிச படையணிகளை வீதியில் இறக்கும் இலக்கினையும் ஆளும் வர்க்கம் கைவிட்டுவிடவில்லை. கூட்டுத்தகர்ந்து போனதற்கான முழுத் தவறையும் தமிழ் மக்களின் தலைகளில் கட்டியடிக்கவும், அவர்களுக்கெதிரான விஷமத்தனமான பிரச்சாரத்தில் குதிக்கவும் வேண்டிய அவகாசம் பற்றியும் அவர்கள் நிச்சயம் கணக்குப் பார்த்துக்கொண்டுள்ளனர். இதன் பொருட்டு பாசிச ஜே.வி.பி. ஏற்கனவே தொழிற்பட்டு வருகின்றது. அந்நிலைமையின் கீழ் ஏகாதிபத்திய வல்லரசுகளதும் பக்கபலத்துடன் வடக்கில் தனியான ஒரு அரசினைத் திணிக்கும் பிற்போக்கு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தெற்கின் ஆட்சியாளர்களுக்கு உதவியாக தொழிற்பட விடுதலைப்புலிகள் அமைப்பு உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் முன்வரவும் இடமுண்டு. இவையெல்லாம் உலக யுத்தத்துக்கும், காலனித்துவ வேலைத்திட்டத்திற்கும் அப்பட்டமாகப் பாய்ந்துகொள்ள அணிதிரண்டுவரும் ஏகாதிபத்தியத் திட்டத்தின் உள்ளேயே அடங்கியுள்ளது.

### தீர்க்கமான அவசியம்

இந்த ஆபத்தான அரசியல் நிலைமையில் தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களின் தீர்க்கமான அவசியம், அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படையில் சுயாதீனமான முறையில் அணிதிரள்வதாகும் உலக சோசலிசப்புரட்சியின் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசுஒன்றியத்தினை கட்டியெழுப்பும் போராட்டத்திற்கு சகல தொழிலாளர்கள், ஏழைவிவசாயிகள், இளைஞர்கள், வீட்டுப்பெண்கள், மாணவர்களையும் அணிதிரட்ட வேண்டும். அந்த முன்னோக்கின் கீழேயே முதலாளித்துவ ஆட்சிமுறையைத் தூக்கிவீசி இலங்கை– தமிழ்ஈழம்




*வே. பிரபாகரன்*

சோசலிசக்குடியரசினை கட்டியெழுப்ப மு
தமிழ்தேசியஇனத்தின் ஜனநாயக உரிமை
ஊர்ஜிதம் செய்வது சிங்கள அல்
தமிழ்முதலாளித்துவ ஆட்சியாளர்களின்
இடம்பெற முடியாது. அதற்கு சிங்கள,
தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்
ஏழைகளை தம்மைச் சூழ அணிதிரட்டு
மூலம் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்
சோசலிச வேலைத்திட்டத்திற்கு அர்ப்ப
பூண்ட தொழிலாளர்– விவசாயிகளின் சோ
சபைகளின் அடிப்படையி
சோவியத்துக்களை நிறுவவேண்டும்.

பொதுஜனமுன்னணி அரசாங்கத்
பிற்போக்குத் திட்டத்துக்கு தோள்கொடுத்
சமசமாஜ– கம்யூனிஸ்ட் தலைவர்க
போலவே அதற்கு சுற்றிவளைத்து ஆ
வழங்கிக்கொண்டு அதையிட்டு நப்பாசைக
விதைத்துவரும் நவசமசமாஜ, இதொ
தொழிற்சங்கத் தலைவர்களையும் வெளி
தொழிலாளர்வர்க்கத்தின் அனைத்துலக
புரட்சிகரத் தலைமையை கட்டியெழு
பிரமாண்டமான அவசியம் இ
உருவாகியுள்ளது.

இராணுவ– பொலிஸ் அ
திட்டங்களையும், பாசிச அச்சுறுத்தல்களை
தோற்கடிக்கும் பொருட்டு மேற்சொ
வேலைத்திட்டத்தினை முன்வைத்
போராடுவது நான்காம் அகிலத்
அனைத்துலகக் குழு
இலங்கைக்கிளையான புரட்சிக்கம்யூனி
கழகமே. அதன் வேலைத்திட்டத்தினை ஆ
செய்து, அதில் இணைந்துகொள்ளும்
தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் அனை
முன்னேற்றமான பகுதியினரையும்
அழைக்கின்றோம்.


மார்க்சிசமுன்னோக்கு
புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் வெளிநாட்டுக்கிளையினா
வெளியிடப்படுகின்றது
மூன்றுமாதங்களுக்கு ஒரு பிரதி.
தனிப்பிரதி விலை னுஆ 6.–
தபாற்செலவு உட்பட நான்கு பிரதிகளுக்கான வருடச்சந்
னுஆ 32.–

www.padippakam.com



# ஐ.ஆர்.ஏ போர்நிறுத்தத்தின் பின்னர் தொழிலாளவர்க்கத்திற்கான முன்வழி.

## *பிரித்தானிய சர்வதேச கம்யூனிஸ்ட்கட்சியின் (ICP) அரசியல்குழுவின் அறிக்கை.*

ஓகஸ்ட்31 நள்ளிரவில் இருந்து IRA (ஐரிஷ் சு இராணுவம்) போர்நிறுத்தப் பிரகடனம் மை, அயர்லாந்தில் சமாதானத்துக்கான புதிய த்தின் அரம்பமாக வரவேற்கப்பட்டுள்ளது. 25ஆண்டுகளாக 3000க்கும் அதிகமான ளைப் பலிகொண்ட ஈவிரக்கமற்ற குறுங்குழு லகளுக்கு முற்றுப்புள்ளி வரும் என்ற ல் உணர்வில் இந்தக் கொடுக்கல் ல்களுக்குப் பின்ணியாக உள்ள நிஜ சக்திகளும் அதன் தாக்கங்களும் தமது ளை அடைத்துக்கொள்ள தொழிலாளர் ரிக்கவே கூடாது.

சின்பைன் (Sinn Fein ஐரிஷ் குடியரசு ருவத்தின் அரசியல் பிரிவு) பிரித்தானிய, ஐரிஷ் ங்கங்களுக்கும் இடையேயான உடன்படிக்கை த்துவ மேலாதிக்கத்தில் இருந்து தம்மை பிக்கும் தொழிலாளர்வர்க்கத்தின் ட்டத்தினை ஒரு அங்குலம் தன்னும் னற்றாது.முழு ஐரிஷ் தொழிலாளர்வர்க்கமும் ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களால் (TNC) சமான முறையில் சுரண்டப்படுவதற்குத் ாக உள்ள அனைத்தையும் நீக்குவதே இதன் இலக்கு.

போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து அடம்சின் ரவது கோரிக்கை, பெல்பாஸ்டின்(Belfast) யவாதப்பகுதிகளில் தனியானதொரு, லிக்கப்பொலிஸ்படை அமைக்கப்படவேண்டும் த. ஏகாதிபத்தியத்தின், ஒரு பொலிஸ் ஏஜன்சி முறையில் ஐ.ஆர்.ஏயின் புதிய பாத்திரத்தினை துவும் நன்கு தெளிவாக அம்பலமாக்காது. பணி, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து ிலாளர்களை ஒரே விதத்தில் உச்சச் ட்லுக்கு உள்ளாக்குவதை ஊர்ஜிதம் செய்வதே.

### பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பகற்கொள்ளை இலக்குகள்.

இந்த கொடுக்கல்வாங்கல்கள், உலகப் ளாதாரத்தின் அடிப்படையான மாற்றங்களின் ாவாகும். உற்பத்தியானது பூகோளரீதியில் ிணைக்கப்பட்டமை, பலதேசிய த்தாபனங்களால் பொருளாதாரவாழ்க்கை மைக்குள்ளானதன் மூலம் ிப்பாடாகியுள்ளது. இது பிரித்தானிய ிபத்தியம் தனது மேலாதிக்கத்தினை னபொறிமுறை, வடஅயர்லாந்திலான இராணுவ ிரமிப்புக்கள் ஊடாக பராமரிக்கும் வல்லமையை துள்ளது.

அமெரிக்காவின் அதிகரித்த போட்டிக்கு கொடுத்த நிலையில் ஐரோப்பிய, தூரகிழக்கு களின் கூட்டுத்தாபனங்கள் ஐரோப்பிய தககூட்டின் உள்ளேயான ஒரு மலிவு ழப்புமேடையாக அயர்லாந்திலிருந்து யம்தேட முயற்சிக்கின்றன. பிரித்தானிய ிபத்தியம் அதனது ஆட்சிவடிவங்களில் மப்புரீதியிலான பொருளாதார, அரசியல் ங்களைச் செய்யும்படி தள்ளப்பட்டுள்ளது.

போர்நிறுத்தம், ஜோன்மேயரினாலும், ஐரிஷ் ர் அல்பேட் ரினோல்டினாலும் ஜனவரியில் ப்பட்ட டவுணிங்வீதி பிரகடனத்தை தொடர்ந்து துள்ளது. அது 'பிரித்தானியாவுக்கு அயர்லாந்தில் சுயநலமான மூலோபாய அல்லது ருளாதார நலன்கள் கிடையாது" என பிட்டது. இது முற்றிலும் பொய்யானது.

பிரித்தானிய ஆளும்வர்க்கம் அதனது ஏகாதிபத்திய அபிலாசைகளைத் துறந்துவிட்டது என்பதை இப்பிரகடனம் குறிக்கவில்லை. ஐக்கியஇராச்சியத்தின் ஒரு மாகாணம் என்ற முறையில் ஆறு கவுன்டிகளிலும் எந்தவிதமான மாற்றத்திற்கும் தனது யூனியனிஸ்ட் ரத்து அதிகார உத்தரவாதத்தின் மூலம் பிரித்தானிய ஆட்சியை வடஅயர்லாந்தின் மீது பதித்திருந்தது.

தமது இந்தப் பழைய காலனியை கைவிடுவதன் அரசியல் இழப்பானது பிரித்தானிய ஆளும் வர்க்கத்தினை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது. போட்டி ஏகாதிபத்திய சக்திகளுடனான அதிகரித்த ஆழமான போட்டியினதும் உள்நாட்டில் தொழிலாளவர்க்கத்துடனான உறவினதும் எதிரில் இது அவர்களைப் பலவீனமடையச் செய்யும்.

படைகளை வேறெங்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பினை பராமரிப்பது உயர்ந்த செலவினைக் கொண்டதாக இருப்பினும் பிரித்தானிய ஆளும்வர்க்கம் அயர்லாந்தில் இன்னமும் முக்கிய அரசியல், பொருளாதார நலன்களைக் கொண்டுள்ளது. அவர்கள் களத்தை




*1975ல் அயர்லாந்தின் பெல்பாஸ்ட்(Belfast) நகரில். பிரித்தானியாவின் ஆக்கிரமிப்புப் படைகள்*

ஐரோப்பாவுக்கு அல்லது அமெரிக்காவுக்கு அல்லது தூரகிழக்குக்கு விட்டுக்கொடுக்க விரும்பவில்லை.

### புதிய மூலோபாயம்.

பிரிவினையின் மூலம் ஒரு உற்பத்தி நிலையம் பிடுங்கப்பட்ட நிலையிலும் சுதந்திரத்துக்கு பின்னரும்கூட குடியரசு அதன் முக்கிய சந்தையும் வெளிநாட்டு முதலீட்டாளருமான பிரித்தானியாவினால் அரசியல் பொருளாதார ரீதியில் மேலாதிக்கம் செய்யப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக பிரித்தானிய மேலாதிக்கம்' தெற்கிலான வெளிநாட்டு முதலீட்டு பெருக்கெடுப்பின் மூலமும் வடக்கு உற்பத்தித் தளங்களின் வீழ்ச்சியினாலும் சவால் செய்யப்பட்டது. பிரித்தானிய ஆளும்வர்க்கம், வடக்கினை ட்ரான்ஸ்நஷனல் முதலீட்டுக்குத் திறந்து விடுவதன் மூலமும் தெற்கில் இந்தப் போக்கினை கட்டுப்பாட்டினுள் கொணர்வதன் மூலமும் முழுத்தீவிலும் ஒரு புதிய காலனித்துவ மேலாதிக்கத்தினை ஊர்ஜிதம் செய்ய முயற்சிக்கின்றது.இந்தப் புதிய மூலோபாயம் பிரித்தானியாவுக்கும் அதன் சில பழைய யூனியனிஸ்ட் கூட்டாளிகளுக்கும் இடையே ஒரு பிளவினை ஏற்படுத்தியுள்ளது. வடக்கின் அரசியலமைப்பு அந்தஸ்த்து தொடர்பாக எதுவிதமான இரகசிய கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது என்ற ஜோன் மேயரின் வாக்குறுதியை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து வணக்கத்துக்குரிய ஐயன் பெயிஸ்லி டவுணிங் வீதியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இது "த இன்டிபென்டன்ட்" பத்திரிகை குறிப்பிட்ட 4 பில்லியன் ஸ்டேர்லிங் அரசாங்க மானியத்தில் வடஅயர்லாந்து தங்கி வாழும் பொருட்டு உருவாக்கப்பட்ட "தங்கிவாழும் கலாச்சாரத்தை" உடைத்தெறிவதற்கு பிரித்தானிய ஆளும்வர்க்கம் செலுத்தத் தயாராக உள்ள ஒரு விலையாகும்.

சகல யூனியனிஸ்ட் கட்சிகளும் பகட்டுடன் உத்தியோகபூர்வமற்ற ருஐளு சமாதான தூதுக்குழுவை சந்திக்க மறுத்துவிட்ட போதிலும் உத்தியோகபூர்வமான யூனியனிஸ்ட் அதிகாரியான ஜேம்ஸ் மொலிநியூக்ஸ் கிளின்டனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அன்டனி லேக்குடனும், உபஜனாதிபதி அல் கோருடனும் பேச்சுவார்த்தைக்காக வெள்ளைமாளிகைக்கு விஜயம் செய்தார். யூனியனிஸ்ட்டுக்கள் தங்கியிருந்த வடக்கின் பாரம்பரியக் கைத்தொழில்கள் பின்னடைந்து விட்டன. முக்கியமான யூனியனிஸ்ட் வர்த்தக நலன்கள் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் நிலைமைகளைச் சிருஸ்டிக்க அவஸ்தைப்படுகின்றன.

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பாத்திரம்.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களை பேரம்பேசுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வகித்த முக்கிய பாத்திரத்தின் மூலம், இந்த நிகழ்ச்சிநிரல் சகல ஏகாதிபத்திய சக்திகளாலும் எந்தளவுக்கு பங்கிடப்பட்டுள்ளது என்பது பொதிந்து போயுள்ளது.போர்நிறுத்த அறிவிப்பு வெளியான 48 மணித்தியாளங்களுள் நிதிஉதவிகளைப்பற்றி கலந்துரையாட அயர்லாந்து வெளிநாட்டு அமைச்சர் டிக் ஸ்பிரிங்கை சந்திக்கும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி கிளிங்ரன் தனது விடுமுறையை முறித்துக்கொண்டார்.

கிளின்டன் இந்தத் தீர்வினை ஆதரிப்பதற்குப் பலம் வாய்ந்த உள்நாட்டுக்காரணங்கள் உள. சோமாலியா, ஹெயிட்டி, கியூபாவிலான அவரின் வெளிநாட்டுக் கொள்கைகள் விபரீதத்தில் முடிந்தன. அயர்லாந்து அவருக்கு ஒரு வெற்றிக்கான சந்தர்ப்பத்தை வழங்குவது போல் தெரிகிறது. அது அவரது சட்டத்தினை காங்கிரசில் நிறைவேற்றுவதற்கு ஐரிஷ்−அமெரிக்கன் ஆதரவை உத்தரவாதம் செய்யும்.

இந்த உடனடியான அரசியல் காரணங்களின் பின்னணியில் உலகம் பூராவும் அதன் பொருளாதார நலன்களை உத்தரவாதம் செய்யும் அமெரிக்க ஏகாதிபத்திய உந்துதல்கள் இருந்து கொண்டுள்ளன. அயர்லாந்தில் இதனை அமெரிக்காவின் நெருக்குவாரத்தின் கீழ் தச்சர் கைச்சாத்திட்ட ஆங்கிலோ−ஐரிஷ் உடன்படிக்கைவரை தேடிக் கண்டுகொள்ள முடியும். இது வருடாந்தம் 20 மில்லியன் டொலர் அமெரிக்க முதலீட்டை அயர்லாந்துக்குள் கொணர்கிறது.

ஜனாதிபதி கிளின்டனின் அந்தரங்க நண்பனான புரூஷ் மொரிசன் தலைமையிலான ஒரு உத்தியோகப் பற்றற்ற சமாதானத் தூதுக்குழு அமெரிக்க முதலாளித்துவத்தின் ஆழமான நலன்களைப் பிரதிபலித்தது. இது அமெரிக்க காப்புறுதி நிறுவனத்தில் கம்பனியின் தலைவர் வில்லியம் பிளைன், ட்ரான்ஸ்நஷனல் ஜெனரால் அட்லான்டிக்கின் சார்ள்ஸ் பீனி போன்ற முன்னணி வர்த்தகப் பிரமுகர்களை உள்ளடக்கியிருந்தது.ஒரு தீர்வுக்கு நெருக்க பிளைன் நிறுவிவரும் செல்வாக்கு மிகுந்த வர்த்தகர் குழுவில் சொத்துடமை கோடீஸ்வரரான டொனால்ட் ட்ரம்ப் ஒரு அங்கத்தவர்.

அமெரிக்க கம்பனிகள் முதலீட்டின் மீது இன்று பெறும் 24 வீதமான பங்கு இலாபமும், இந்த ஏற்பாடுகளை பெல்பாஸ்டின் உள்ளும் விஸ்தரிப்பதற்குமான சாத்தியமுமே இவர்களை அயர்லாந்துக்குள் ஈர்க்கின்றது.

அமெரிக்க தொழிற்சங்க சம்மேளனமான யுகுடு−ஊஐழுன் இரண்டு பிரதிநிதிகள் இந்தத் தூதுக்குழுவின் முக்கிய பாகமாக உள்ளனர். அவர்களின் பணி, பலதேசிய முதலீட்டுக்கு அவசியமான கூட்டுறவுவாத கொள்கைகளை அபிவிருத்தி செய்வது எப்படி என்பதையிட்டு சின்பைனுக்கும் ஐரிஷ் முதலாளி வர்க்கத்தின் ஏனைய பகுதியினருக்கும் ஆலோசனை வழங்குவதாகும்.

அமெரிக்கா ஐரோப்பாவினுள் இந்த திடீர் ஊடுருவலை செய்யும்போது ஐரோப்பிய யூனியன் தலைவரான ஜக்குவாஸ் டிலோர்ஸ் சமாதானப் போக்குக்கு உதவ அதிக அளவிலான நுரு பணம் வழங்கப்படும் என உடனடியாகக் குறிப்பிட்டதையும் குறிப்பிடாமல் விடமுடியாது.

### முதலாளித்துவ தேசியவாதத்தின் வங்குரோத்து.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கான ஐ.ஆர்.ஏயின் அடிபணிவு, ஓராண்டின் முன்னர் வெள்ளைமாளிகை பசும்புற்தரையில் இஸ்ரேலியப் பிரதமர் ராபினுடன் யசீர் அரபாத் கைகுலுக்கியதன் மூலமும், தென்ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவும் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் ஆட்சிப்பீடம் ஏறியதன் மூலமும் முன்னெடுக்கப்பட்ட நன்கு நெய்யப்பட்ட பாதையில் தொடர்கின்றது. உலகப்பொருளாதாரத்தில்

படிப்பகம்

www.padippakam.com



ஏற்பட்ட மாற்றங்கள் புதிய சுதந்திர முதலாளித்துவ தேசியஅரசுகளை சிருஷ்டிக்கும் அவர்களின் வேலைத் திட்டத்தினை முற்றிலும் வங்குரோத்தானதாக்கியுள்ளது.

இந்த மாற்றம் ஐ.ஆர்.ஏயின் முழுவரலாற்றிலிருந்தும் வர்க்கப் பண்பிலிருந்தும் பெருக்கெடுக்கின்றது. மத்தியதரவர்க்க தீவிரவாதிகளதும், ஸ்டாலினிஸ்டுகளதும் செல்வாக்கின் கீழ் பல்வேறுகட்டங்களிலும் இது சோசலிச ஆடையினால் அலங்கரிக்கப்பட்ட போதிலும் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசாமலே ஒரு ஐக்கிய முதலாளித்துவ அயர்லாந்தை சிருஷ்டிப்பதே அவர்களின் இலக்காக கூறப்பட்டுள்ளது. தொழிலாளர்வர்க்கம் முகம்கொடுக்கும் பெரிதும் அடிப்படையான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமலே அயர்லாந்து விடுதலையை அடையமுடியும் என்ற நப்பாசையை ஐ.ஆர்.ஏ வளர்த்து வந்தது.

அதன் ஆரம்பத்தில் இருந்தே-இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே அயர்லாந்து முதலாளிவர்க்கத்தின் ஒரு பிரிவினரைப் பிரதிநிதித்துவம் செய்த ஐ.ஆர்.ஏ முதலாளித்துவப் புரட்சியின் ஜனநாயகப் பணியை அமுல் செய்வதற்கும், அயர்லாந்தை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை செய்யவும் என்றுமே இலாயக்கற்றதாக இருந்து வந்தது. இன்றைய அவதாரத்தில் ஐ.ஆர்.ஏ 1969 கிளர்ச்சியின் பிரதிபலிப்பால் தோன்றியது. அப்போது தொழிலாளர்வர்க்கம் தொழிற்கட்சியினாலும், தொழிற்சங்கங்களாலும் கைவிடப்பட்டிருந்தது. சோசலிசத்திற்கு எதிரான கத்தோலிக்க குட்டிமுதலாளித்துவ தட்டினரைப் பிரதிநிதித்துவம் செய்த அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தினை சுயாதீனமான முறையில் அணிதிரட்டுவதை எதிர்த்து ஒடுக்கு முறைக்கு எதிரான வெறுப்பையும், பாகுபாடுகளையும் ஒரு தேசியவாத குறுங்குழு திசையில் நெறிப்படுத்தினர். ஒரு ஐக்கிய ஐரிஷ் அரசின் நிர்மாணம் தொழிலாளர்வர்க்கத்தைச் சுரண்டுவதில் தாமும் இணைந்து கொள்வதற்கான சாதனமாக நோக்கப்பட்டது. அவர்களின் "ஆயுதப்போராட்டம்" தம்மை கனிஷ்ட பங்காளிகளாக ஏகாதிபத்தியத்தினை ஏற்க நெருக்கும் ஒரு சாதனமேயன்றி வேறொன்றும் அல்ல. ஏகாதிபத்திய அரசாங்கங்களுடனும், ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுடனும் ஒரு நேரடி உறவை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் இதனை அடையும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதை இவர்கள் இப்போது காண்கிறார்கள்.

கத்தோலிக்க குட்டிமுதலாளித்துவத்தின் பகுதியினர் கலவரங்கள் மூலம் தம்மைப் பணக்காரராக்கிக் கொண்டதோடு பெருகிவரும் ஐ.ஆர்.ஏயின் செல்வத்துக்கும் பங்களிப்புச் செய்தனர். சின்பின் ஐரிஷ்-அமெரிக்கன் வர்த்தக சமூகத்துடன் ஏற்கனவே பலமான உறவுகள் கொண்டுள்ளது. ஐ.ஆர்.ஏ தற்போது "நரைத்த பொருளாதாரத்தில்" இருந்து 10 மில்லியன் ஸ்டேர்லிங் உழைத்துள்ளதாகப் புகழ்பெற்றுள்ளதோடு, இது இதனை முதலாளித்துவ நிறுவனங்களில் மறுமுதலீடு செய்கின்றது. அரசாங்கத்திலும், கைத்தொழிலிலும் பதவிகள் வகிப்பதன் மூலம் இவர்கள் இந்த சுயநலன்களை விருத்திசெய்ய இப்போது முயற்சிக்கின்றனர். இங்கு அவர்கள் அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் வரும் புதிய மூலதனப் பாய்ச்சலை நிர்வகிப்பர்.

## ஸ்டாலினிசம், சமூகஜனநாயகம், மத்தியவர்க்க தீவிரவாதம்.

ஒவ்வொரு முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களது வீழ்ச்சியும் ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியைத் தொடர்கின்றது. இவ்விரண்டுக்கும் இடையே ஆழமான உறவு உண்டு. இவை இரண்டும் தேசிய ஏகபோகங்கள், சுயபூர்த்தி கொள்கைகளின் மேல் பூகோளமயமாக்கம் கொணர்ந்த தாக்கங்களின் பெறுபேறுகளாகும்.

மேலும் தேசியவாத இயக்கங்கள் தொழிலாளவர்க்க இயக்கங்களை மேலாதிக்கம் செய்வதும், ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தை நடாத்துபவர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் வல்லமையும் ஸ்டாலினிசமும், சமூகஜனநாயகமும் தொழிலாளர்வர்க்கத்தினை சித்தாந்தரீதியில் நிராயுதபாணியாக்குவதிலேயே தங்கியிருந்தது.

இது கடந்த 70 ஆண்டுகளாக முதலாளித்துவ தேசியவாதம் அயர்லாந்து தொழிலாளர்வர்க்கத்தினை மேலாதிக்கம் செய்வதை சாத்தியமாக்கியது. இரண்டாம்அகிலத்தின் தலைவர்கள்- லெனின், ட்ரொக்சியைத் தவிர- 1916 ஈஸ்டர் கிளர்ச்சியை ஆதரிக்க மறுத்தனர். 1917 அக்டோபர் போல்ஷிவிக் புரட்சியின் பின்னர் அயர்லாந்தில் ஒரு கம்யூனிஸ்ட்கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால் இதன் அபிவிருத்தி மூன்றாம் அகிலத்துள் வளர்ச்சிகண்ட ஸ்டாலினிசத்தினால் சிரச்சேதம் செய்யப்பட்டுவிட்டது. ஸ்டாலினிசம் அயர்லாந்தில் தொழிலாளர்வர்க்கத்தினை தொழிற்சங்க சின்டிக்கல்வாதம், முதலாளித்துவ தேசியவாதக் கூட்டுக்கு கீழ்ப்படிய வைத்ததோடு ஒரு சுயாதீனமான வர்க்க முன்னோக்கினை அபிவிருத்தி செய்வதையும் தடுத்தது.

இது பிரித்தானிய தொழிலாளர்கட்சியின் துரோகப் பாத்திரத்துடன் கூட்டுச்சேர்ந்தது. ஈஸ்டர் கிளர்ச்சியை இரத்தம் தோய்ந்த முறையில் நசுக்கிய அமைச்சரவையில் தொழிற்கட்சியினர் அமர்ந்த 1916ல் இருந்து யூனியன்வாதத்தினை தூண்டிவிட படைகளை வடஅயர்லாந்தினுள் அனுப்பிய 1969ன் தொழிற்கட்சி அரசாங்கம் வரை - இந்நூற்றாண்டு பூராவும் அயர்லாந்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினை இது ஆதரித்தது.

1969ல் கத்தோலிக்கப் பகுதியிலிருந்த தொழிலாளர்வர்க்கம் யூனியன்வாத சேரிகளுக்கு எதிராக கிளர்ச்சியில் இறங்கியபோது குடியரசுவாதம் ஒரு செல்வாக்கிழந்த சக்தியாக இருந்தது. ஸ்டாலினிஸ்டுக்களும், மத்தியதரவர்க்கத் தீவிரவாதிகளும் இதனை புத்துயிர் பெறச்செய்து இதன்சீவிய குத்தகையை புதுப்பித்தனர். ஐ.ஆர்.ஏயின் "ஆயுதப்போராட்ட" பயங்கரவாத இயக்கத்தினை மகத்தானதாகக் காட்டி அதனுடன் சேர்ந்தனர். முதலாளித்துவதேசியவாத இயக்கங்கள் கியூபாவிலும், நிகரகுவாவிலும் ஈட்டிய வெற்றியைச் சுட்டிக்காட்டி, அவற்றையும்பலஸ்தீனிய விடுதலைஇயக்கம், ஆபிரிக்க தேசியகாங்கிரசுக்கு உரிய அகழியில் வைத்தனர்.

இந்தச் சகல இயக்கங்களதும் முன்னோக்கும் இந்தப் பனிப்போர் காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கும், ஸ்டாலினிசத்திற்கும் இடையோன மோதல்களை தமது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்துவதாக விளங்கியது. இவர்களும், ஸ்டாலினிஸ்ட்டுகளும் தொழிலாளர்களின் சுயாதீனமான எந்தவொரு ஆரம்பிப்பினையும் நசுக்க இனணந்து செயற்பட்டுள்ளனர்.

ஸ்டாலினிஸ்ட்டுகள் தேசியவிடுதலை இயக்கங்களை ஏகாதிபத்தியத்திற்கான கொடுக்கல்வாங்கல்களில் ஒரு பேரம்பேசும் "பகடைக்காயாக" பயன்படுத்தும் பொருட்டு அவற்றுக்கு வரையறுக்கப்பட்ட உதவியை வழங்கினர்.

ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி சகல தேசியவிடுதலை இயக்கங்களையும் வலதுசாரி திசைக்கு - நேரடியாக ஏகாதிபத்திய முகாமினுள் தள்ளியது. ஐ.ஆர்.ஏயின் அடிபணிவானது அத்தகைய ஒரு தலைமையின் கீழ் அயர்லாந்து தொழிலாளர்வர்க்கம் ஏகாதிபத்தியத்திடமிருந்து தன்னை விடுதலை செய்துகொள்ள முடியும் என்ற கனவைச் சிதறுண்டு போகச்செய்துள்ளது.

குடியரசு இயக்கத்தினை ஒரு சோசலிஸ்டாகவும்அயர்லாந்து தொழிலாளர்வர்க்கத்தின் ஒரே நியாயமான பிரதிநிதியாகவும் காட்டிவந்த மத்தியதரவர்க்கத் தீவிரவாதிகள், தொழிற்கட்சி "இடதுசாரிகள்" அனைவரையும் இது அம்பலப்படுத்தியுள்ளது. அயர்லாந்து தொழிலாளர்களை தேசியவாதத்துடன் பிணைப்பதும், அவர்கள் ஒரு புரட்சிகர சோசலிச வேலைத்திட்டம் பக்கம் திரும்புவதை தடைசெய்வதும் அவர்களின் பாத்திரமாக இருந்தது.

## தொழிலாளர்வர்க்கத்தின் அரசியல் பணிகள்

"ஆயுதப்போராட்டத்தின்" முடிவு சமாதான அபிவிருத்திக்கும் செழிப்பின் வளர்ச்சிக்குமான ஒரு காலப்பகுதிக்கு கதவுகளைத் திறந்துவிடாது. இந்த ஏகாதிபத்தியச் சக்திகளும் அயர்லாந்தின் முதலாளிவர்க்கமும் வர்க்கத்துக்கான ஒரு நிகழ்ச்சிநிரலைத் தயார் செய்து கொண்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனியில் இடம்பெற்றதை ஒத்த கைத்தொழில், சமூக பேரழிவுகளின் ஒரு போக்குத் தயார் செய்யப்பட்டு வருகின்றது. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து தொழிலாளர்கள் தமது தொழில், சம்பளங்கள் சமூக நிலைமைகளின் மேல் ஒரே பாணியிலான ஒரு , முறையான தாக்குதலைக் காண்பர். 'வடக்கில் தங்கிவாழும்' கலாச்சாரத்துக்கு முடிவுகட்டுதல்' என்பதன் அர்த்தம் புரட்டஸ்தாந்து தொழிலாளர்களுக்கும் கைத்தொழில்கள் மறுசீரமைக்கப்பட்டு நலன்புரி நடவடிக்கைகள் ஒழிக்கப்பட்டதால் அரசசெலவில் தங்கியுள்ள மத்தியதரவர்க்கத்தினரின் பெரும் பகுதியினருக்கும் எஞ்சியுள்ள சலுகைகளை அழிப்பதாகும்.

டப்ளினுக்கும், பெல்பாஸ்டுக்கும் இடையேயான ஒரு 100 மைல் வியாபார நடைபாதை பற்றி நிதியியல் பத்திரிகைகளில் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டு வருகின்றது. சகல முதலீடுகளும் இந்த கிழக்குக் கடற்கரை ஓரமாகவே குவிக்கப்படும். பிரித்தானிய, ஐரோப்பியச் சந்தைகளுடனான இதனது நெருங்கிய தொடர்புகளால் இது ஏனைய பகுதிகளது-வடக்கு, தெற்கு-பொருளாதார அபிவிருத்தியை மேலும் பாதிக்கும். உலகின் பல பாகங்களில் சுதந்திரவர்த்தக வலயங்களின் அபிவிருத்தியில் கண்டதுபோல் இது அதிகரித்த வறுமைக்கும் அயர்லாந்து புதிய பொருளாதார துண்டுகளாக்கப்படுவதற்கும் இட்டுச்செல்லும்.

அயர்லாந்து தொழிலாளர்வர்க்கத்தின் மேல் திணிக்கப்பட்டுள்ள நிலைமைகள் ஐரோப்பாவுக்கான ஒரு புதிய அளவை மட்டக் குறியை ஏற்படுத்தும், இது பிரித்தானியத் தொழிலாளர்வர்க்கத்தின் மேல் பேரழிவு தாக்கத்துடன் கூடிய பொருளாதார, சமூக கிளர்ச்சியை உண்டுபண்ணும். பிரித்தானிய, அயர்லாந்து தொழிலாளர்வர்க்கத்தின் தலைவிதி என்றும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டது. அது இன்றுபோல் என்றும் உண்மையாய் இருந்தது இல்லை. கடந்த 25 ஆண்டுகளாக ஐரிஷ், பிரித்தானிய தொழிலாளர்வர்க்கம் சந்தர்ப்பவாத தொழிற்கட்சித் தலைவர்களால் பிரித்து வைக்கப்பட்டது. இவர்கள் ஐரிஷ் விரோத சோவினிசத்தினை தூண்டிவிட்டதோடு தொழிலாளர்வர்க்க இலக்குகள் மீது ஐ.ஆர்.ஏயினால் தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் கொஞ்சநஞ்சமல்ல. இதனை இனி வெற்றிகொள்ள முடியும்.

இந்த நூற்றாண்டின் கசப்பான படிப்பினைகள் கற்கப்பட்டு ஏகாதிபத்தியத்தினால் பயிரிடப்பட்ட குறுங்குழு பிளவுகள் நிராகரிக்கப்படின் இந்த மட்டமிடும் போக்கானது கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து தொழிலாளர்கள் இருவரும் பிரித்தானியத் தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுவதற்கான புறநிலை நிலைமைகளை உருவாக்கும்.

தொழிலாளவர்க்கத்தின் நலன்களை உள்ளடக்கிக்கொண்டுள்ள ஒரே வேலைத்திட்டம்- முதலாளித்துவத்தை தூக்கிவீசி, ஐக்கியஐரோப்பிய சோசலிஸ்ட் அரசுகளதும், ஒரு உலக சோசலிஸ்ட் சமஸ்டியினதும் ஒரு பாகமாக அயர்லாந்திலும், பரித்தானியாவிலும் தொழிலாளர் அரசாங்கங்களை அமைப்பது- நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வேலைத்திட்டமே. இந்த அடிப்படையில் மட்டுமே ஐரிஷ் தொழிலாளர்கள் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான தமது அவாவினை அடையமுடியும். இது பிரித்தானியாவில் சர்வதேசியகம்யூனிஸ்ட் கட்சியை (ICP) கட்டியெழுப்புவதையும், நா.அ.அ.கு.வின் ஒரு பகுதியினை அமைப்பதனூடாக அயர்லாந்தில் புதியபுரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்புவதையும் வேண்டி நிற்கின்றது.'

*ஒவ்வொரு முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களது வீழ்ச்சியும் ஸ்டாலினிச ஆட்சி வீழ்ச்சியைத் தொடர்கின்றது. இவ்விரண்டுக்கும் இடையே ஆழமான உறவு உண்டு. இவ இரண்டும் தேசிய ஏகபோகங்க சுயபூர்த்தி கொள்கைகளின் மே பூகோளமயமாக்கம் கொணர்ந்த தாக்கங்களின் பெறுபேறுகளாகு மேலும் தேசியவாத இயக்கங்க தொழிலாளவர்க்க இயக்கங்க மேலாதிக்கம் செய்வதும், ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தை நடாத்துபவர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் வல்லமையு ஸ்டாலினிசமும், சமூகஜனநாய தொழிலாளர்வர்க்கத்தினை சித்தாந்தரீதியில் நிராயுதபாணியாக்குவதிலேயே தங்கியிருந்தது.*

www.padippakam.com



# அரசாங்கமாற்றமும் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் உள்ள ஆபத்துக்களும்

பாதுத் தேர்தலினால் 17 ஆண்டுகால பி ஆட்சி அகற் றப்பட்டு, இப்போது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ப் பிரமாணம் செய்து கொண்டுள்ளது. ஜன மக்க ளின் வெறுப்புக்கு இலக்கான பி மிடம் இருந்து தலை தப்பும் ண்டமான அவசியம் மக்களிடையே ந் தது. அந்த அவசியம் முதலாளித்துவ ப்பில் இருந்து தலைப்பும் புறநிலை ன அவசியத்தை உள்ளடக்கிக் ட்டிருந்த போதிலும் அதற்கு வேண்டிய தொழிலாளர் ஒடுக்கப்படும்மக்களிடையே க்கப் பட்டிருக் கவில்லை. அதன் தீய வாக, பொதுஜன முன்னணி ஆட்சிப்பீடம் தன் மூலமும் ஆட்சியில் ஏற்பட்டுள்ள த்தின் மூலமும் பொதுமக்களின் கஙளில் எதுவும் இட்டு நிரப்பப்படாதது ் அன்றி, தொழிலாளர் ஒடுக்கப் படும் ரின் சகல பிரிவினருக்கும் எல்லாப் ளில் இருந்தும் மோசமான தாக்குதல் க்கப்படும் சகாப்தம் ஆரம்பமாகியுள்ளதாக க் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கிறது.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே ர்டு விடையங்கள் ஆபத்தை ருவிக்கின்றன:

1. ஆளும்வர்க்கம் முகம் கொடுத்துள்ள நெருக்கடி.
2. தொழிலாள வர்க்கத்தின் தலைமை, ன வேலைத் திட்டம் தொடர்பாக நிலவும் ரமான நெருக்கடி.

1992ல் யூ.என்.பி இரண்டாகப் பட்டதன் மூலமும், அதிலி ருந்து யேற்றப்பட்டவர்களின் தலைவரான லலித் லத்முதலி 1993 ஏப்ரில் தொடக்கத்தில் ல செய்யப்பட்ட தன் மூலமும், இதில் து இரண்டு நாட்களின் பின்னர் மே 1ம் ஜனாதிபதி கொலையுண்டதன் மூலமும் ன்பி ஆட்சியாளர்களிடையே புரையேறிப் ந்த நெருக் கடி அம்பலத்துக்கு வந்தது, ஜ, ஸ்ராலினிச, நவசம சமாஜ தலைவர்கள் னித நாடகத்தின;" முடிவைப் பற்றி டிக் கொண்டு ஜனாதிபதி விஜயதுங்காவின் யக லைத்திட்டத்தை தூக்கிப்பிடிக்க போதிலும், வடக்கில் இடம் பெற்று வந்த த யுத்தத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட வியினால் ஈடாட்டம் கண்டு போன யை இந்த மிண்டு கோல்களால் தூக்கிப் க முடியாது போய் விட்டது. ளித்துவ சிலசு கட்சிக்குள் இடம் பெற்ற றிகளைப் பயன்படுத்தி அனுரா ரநாயக்கா தலை மையிலான பேர் ளை யூ.என்பி க்குள் சேர்த்தும், காமினி க்கா கும்பலையும் ரொனி டீ மெலையும் வும் கட்சிக்குள் இளுத்துக் கொண்டதன் ம் வீழச்சி காணஇருந்த ஆட்சிக்கு போட எடுத்த முயற் சிகளும் அப்படியே றுப்போயின. தென்மாகாண சபைத் ல் யூ.என்பி க்கு கிடைத்த படுதோல்வி சாட்சி பகிர்ந்தது.

இதற்கிடையே கொழும்பு பங்கு முதல் யில் பங்குகளின் விலைகள் தலைகீழாக கண்டதோடுமட்டுமன்றி அரசா ங்கத்தின் டம் காரணமாக பல்தேசியக் கூட்டுத்தாபனங் களின் முதலீடுகளிலும் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டன. பொதுஜனங்களின் கண்களில் மண்ணைத்தூவி, வளர்ச்சி கண்டுவரும் பொதுஜன ஆத்திரத்தினைத் தணிக்க ஜனாதிபதி விஜயதுங்க மே 1ம் திகதி வழங்கிய சலுகைப் போராட்டமும் அதைத்தொடர்ந்து வழங்கிய ஒரு தொகை வாக்குறுதிகளும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் எதிர்ப்புக்குள்ளாகியது. இந்தச் சலுகை வாக்குறுதிகளை பொருட்படுத்தாமல் சுதந்திர வர்த் தக வலையம் உட்பட பல்வேறு துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களிலும், சட்டப்படி வேலை செய்யும் இயக்கங்களிலும் மறியல் போராட்டங்களிலும் குதித்தனர். ஏழை விவசாயிகளுக்கு இடையேயான துயரங்க ளும், அவலங்களும் பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 23 விவசாயிகள் ஒரு சில வாரங்களுள் கடன் சுமை காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் நிலையைத் தோற்றுவித்தது. பல்கலைக்கழக மாணவர்கள், விடுதிகளற்ற அவல நிலையை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.

ஜனாதிபதி விஜயதுங்கா தனது அமைச்சரவை உறுப்பினர்க ளையே ஆச்சரியத்துக்கு உள்ளாக்கும் விதத்தில் திடுதிப்பென இந்த பொதுத் தேர்தல் முடிவை எடுத்ததிற்கு காரணம், ஆளும்வர்க்கம் முகம் கொடுத்திருந்த இந்த அவல நிலையில் இருந்து தலை எடுப்பதற்கான ஒரு மார்க்கமாகவே. ஆனால் தேர்தல் முடிவுகளோ ஆளும் வர்க்கத்தின் நெருக்கடிக்கு தீர்வாக இல்லாமல் அதை மேலும் உக்கிரமாக்கியுள்ளது.

## இராணுவத் தீர்வுக்கு சதி

யூ.என்பி ஆட்சியில் இருந்து விடுபடும் அவசியம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எவ்வளவுதான் தீர்க்கமானதாக இருந்த போதிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்பார்த்த ஆசனங்களை அதனால் கைப்பற்ற முடியவில்லை. பழைய பாராளுமன்ற முறையைக் கருத்தில் கொண்டு பார்ப்பின் யூ. என்பி அது பெற்றிருந்த 80க்கு அதிகமான ஆசனங்களில் தோல்வி கண்டு 42 ஆசனங்களிலேயே வெற்றி பெற்றுள்ளது. எனினும் இன்றைய விகிதாசார தேர்தல் முறையின் கீழ் அதற்கு 91 ஆசனங்கள் கிடைத்துள்ளது. தேர்தல் முடிவுக ளின் மூலம் வெளிப்பட்டான ஆட்சியாளர்களின் ஈடாட்ட நிலையை பாராளுமன்றச் சதியுடன் கைகோர்த்த இராணுவபொலிஸ் அதிகாரத்தின் அடிப்படையிலான ஜனாதிபதி ஆட்சிக்கு மாறிச் செல்லப் பயன்படுத்துவதற்கு காமினி திசநாயக்கா தலைமைமி லான யூ.என்பி யின் சில பிரிவினர் முயன்றது, இப்பொழுது அம்பலமாகியுள்ளது. ஆகஸ்ட் 17ம் திகதி ஜனாதிபதி மாளி கைக்கு அழைக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வாவும் இராணுவத் தளபதிகளும் ஒரு சிறுபான்மை அரசாங்கத்தை யூ.என்.பி அமைக்குமிடத்து அதைப் பாது காப்பதில் பொலிசும், இராணுவமும் வெற்றி பெறுமா என்ற பிரச்சனையை சந்தித்தனர். வடக்கு, கிழக்கை தனது ஆதிக் கத்தின் கீழ் கொணர முடியாமல் யுத்தத்தில் அடிவாங்கிக் கொண்டுள்ள ஆயுத படைகளால் தெற்கில் ஆட்சியை ஊத்தர வாதம் செய்யமுடியாதென அவர்கள் ஜனாதிபதி முன்நிலையில் கூற நேரிட்டமை அப்படி ஒன்றும் புதுமையல்ல. இதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் தாய்லாந்தில் இலங்கைத் தூது வராகப் பணிபுரியும் மாஜி இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரத்னா திடீரென ஆகஸ்ட் 12ம் திகதி நள்ளிரவில் இலங் கைக்கு தருவிக்கப்பட்டு மூன்று நாட்களாக ஆயுதப்படைத் தளபதிகளுடன் நடத்திய சதிப் பேச்சுவார்தைகள் பயனளிக்க வில்லை என்பதை இது சுட்டிக்காட்டியது.

ஆட்சியில் தொடர்ந்தும் ஒட்டிக் கொள்ளும் சதியின் பொருட்டு 17ம் 18ம் திகதிகளில் ஒரு புறத்தில் முன்கூட்டியே ஆயுதம் தாங்கச் செய்யப்பட்ட யூஎன்பி குண்டர் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன, மறுபுறத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ், நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொணரப்பட்டது.

## பொது ஜன ஐக்கிய முன்னணியிடம் அரசாங்கம் ஒப்படைப்பு

இந்த சதிகள் தோல்வி கண்ட நிலையிலேயே அரசாங்கம் பொது ஜன ஐக்கிய முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டது. 1962ல் ஆளும்வர்க்கம் முகம்கொடுத்த ஆட்சி நெருக்கடியின் போது, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இராணுவ ஆட்சியை அமைப்பதா என்பதைக் கணக்குப் பார்த்துவிட்டு சரிப்பட்டு வராதெனத் தெரிந்ததைத் தொடர்ந்து இடதுசாரித் தலைவர் களை அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ள முடிவுசெய்ததைப் போன்றதாக இது விளங்கியது. அவ்வாறே 1964ஐ விட மோச மான நெருக்கடிக்கு ஆளும் வர்க்கம் உள்ளாகியுள்ள ஒரு நிலைமிலேயே இது இடம்பெற்றுள்ளது. பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், 11 ஆண்டுகால இனவாத யுத்தத்தின் மூலம் இலட்சக்கணக்கான தமிழ் மக்களையும், 1988–90 மக்கட் படுகொலை மூலம் தெற்கில் ஒருலட்சம் இளைஞர் களையும் படுகொலை செய்ததைத் தொடர்ந்தும், ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ ஆட்சியின் ஸ்திரப்பாட்டை நிலைநிறுத்த முடியாமல் போயுள்ள ஒரு நிலையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி மூலம் இந்த ஏகாதிபத்தியசார்பு, ஆட்சியைக் கொண்டு நடாத்துகையில் எடுக்கவுள்ள மக்கள் விரோத நடவடிக்கைகளின் காட்டுமிராண்டித் தன்மைக்கான முன்நிலைமைகள் இவைதான். புதிய அரசாங்கம் யூ.என்பி ஆட்சி நிறுத்திய இடத்தில் இருந்து தொடங்க வேண்டியுள் ளது. பொதுமக்களுக்கு எதிரான காட்டுமிராண்டித் தாக்குதல் களை தொடர்வதையும் உக்கிரமாக்குவதையும் உத்தரவாதம் செய்யும்பொருட்டு, முப்படையின் ஆணையிடும் தலைவராக வும் இராணுவம் பொலிசுக்கு பொறுப்பான பாதுகாப்பு அமைச் சராகவும் ஜனாதிபதி விஜயதுங்காவே தொடர்ந்தும் செயற் பட்டுவருகிறார். இனவாத யுத்தத்தினதும் மக்கட் படுகொலை மினதும் வழிகாட்டியான பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதியே தொடர்ந்தும் வைத்துக்கொள்ள பொதுஜன ஐக் கிய முன்னணி இணங்கியதன் மூலம் இந்த ஆட்சியின் கீழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் எந்த ஒரு நிவாரணத்தி னையோ அல்லது சலுகைகளையோ எதிர்பார்ப்பது உமிராபத் தான ஏமாற்றம் என்பதை தெளிவுபடுத் திக் கொண்டுள்ளது.

## சமசமாஜ ஸ்ராலினிசத் தலைவர்களுக்கு மீண்டும் அழைப்பு

1964–1970 களைப் போலவே முதலாளித்துவ ஆட்சியின் வீழ்ச்சியைத் தவிர்க்கும் பொருட்டும் பொது ஜனங்களுக்கு எதிரான காட்டுமிராண்டித் தாக்குதலுக்கான கதவுகளைத் திறந்து விடவும் சமசமாஜ ஸ்ராலினிசத் தலைவர்களுக்கு மீண்டும் அமைச்சர் கதிரைகள் வழங்க நேரிட்டுள்ளது. சம சமாஜத் தலைவர் பேர்னாட் சொயிஸாவுக்கும், ஸ்ராலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திக்கா குணவர்தனாவுக்கும் அமைச்சர் பதவிகள் கிடைத்துள்ளதோடு நவ சம சமாஜக் கட்சியில் இருந்து திரும்பவும் சமசமாஜக் கட்சிக்குள் நுளைந்த வாசு தேவ நாணயக்காரவுக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்குவது பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றது. பெரும்பாலும் பல்தேசியக் கூட்டுத் தாபனங்களுக்கு அடிமை உழைப்பை வழங்கும் பொருட்டு பிரதித் தொழிலமைச்சர் பதவி அவருக்குக் கிடைக்கலாம்.

இக்கட்சிகள் முழுமனே முதலாளித்துவக் கட்சிகளாக பரிணா மம் அடைந்துள்ளன. தேர்தல் சமயத்தில் பேர்னாட் சொய்சா "திறந்த பொருளாதாரக் கொள்கையை மாற்ற முடியாது" என அத்தாட்சிப் பத்திரம் வெளியிடப்பட்டமையும், நாணயக்காரா இன்றைய உலக நிலமையின் கீழ் சோசலிசத்தை கட்டி எழுப்புவது கடினம் எனவும் "எவரும் சோசலிசத்தை எதிர் பார்க்கவில்லை" எனச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை யும் இதனை ஊர்ஜிதம் செய்கின்றது. இன்று பேராசிரியர் ஏர்னஸ்ட் மண்டேலினால் வழிநடத்தப்படும் ஏகாதிபத்திய சார்பு பப்பிலோவாத இயக்கத்தின் முதலாளித்துவ அசிங்கங்கள் இங்குபோல் துலாம்பரமானது எங்கும் கிடையாது.

இத்தலைவர்களும் ஸ்ராலினிஸ்ட்டுக்களும் அமைச்சர் கதிரைக ளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் இவர்க ளுக்கு ஏதோ பாரிய மக்கள் அடிப்படை இருப்பதனால் அல்ல. நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட இருந்த சமயத்தில் நவ சமசமாஜ கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார குத்துக் கரணம் அடித்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந் து கொண்டார். அப்படி இல்லையேல், பாராளுமன்ற ஆசனத் தைப் பாதுகாக்கமுடியாது என்பதை நன்கு புரிந்து கொண்டி ருந்ததே காரணமாகும்.

சகல மாவட்டங்களிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி பட்டி யலில் தொங்கி பாராளுமன்ற உறுப்பினர்களான இவர்கள் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் தலைவர்கள் என்ற யோக்கியதையை இழந்துவிட்டனர். எனினும் முதலாளிகளின் கைத்தேங்காயாக உள்ள இவர்களின் சிவப்பு ஆடைகளைக் காட்டி, பொது மக்களின் ஒரு பிரிவினரை தற்காலிகமாவேனும் ஏமாற்றிக் குழப்பலாம் என

படிப்பகம்

www.padippakam.com





பாராளுமன்றத்தேர்தல் பிரச்சாரத்தின்போது வேட்பாளர் ஏழை விவசாயிகளுடன் கலந்துரையாடுகின்றார்.

ஆளும் வர்க்கம் அறியும். இந்த துரோகத் தலைமைகள் பொதுமக்களிடையே சோசலிச நனவினை சிதறடித்ததன் பெறுபேறாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்தியசார்பு யூ.என்.பி. வேலைத்திட்டத் தினையே சுமந்து கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி இதன் உதவியோடுதான் வாக்குகளை கறந்து கொண்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியால் தேர்தல் காலத்தில் வழங்கப் பட்ட வாக்குறுதிகள் வேகமாக மறுக்கப்பட்டுவிடும். இத் தகைய பொய் வாக்குறுதிகளை விற்பனை செய்து ஆட்சிக்கு வந்த தென்னாபிரிக்க நெல்சன் மண்டேலா ஆரசாங்கம், ஆட்சிக்கு வந்து நூறுநாட்கள் கழிந்துவிட்ட போதிலும் எந்த ஒரு மசோதாவையும் இயற்றவில்லை. இதற்கிடையே தென் னாபிரிக்காவில் இனவெறிக் கலவரங்களை உண்டுபண்ணியும் அரச இயந்திரத்தினை மேலும் மேலும் பலப்படுத்தியும், சிறைக் கூடங்களை மேலும் விஸ்தரிப்பதன் அவசியம் பற்றி பேசிக் கொண்டும் தொழிற்படும் நெல்சன் மண்டேலா அரசாங்கத்திலி ருந்து வேறுபட்ட மார்க்கம் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு இருக்க முடியாது.

ஏகாதிபத்தியத்துக்கும், நிறவெறிக்கும், முதலாளித்துவச் சுரண் டலுக்கும் எதிரான வாயடிப்பில் ஈடுபட்டிருந்த தேசியவாத முதலாளித்துவத் தலைவர்களைப் போலவே பேர்னாட்சொய்சா, நாணயக்காரா போன்றவர்களும் நாட்டுக்கு நாடு தொழிலாளர் களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக இட்டுநிரப்பும் கடைகெட்ட பாத்திரத்தினை இலங்கையிலும் கண்டு கொள்ள முடியும்.

பூகோளமயமான உலகப் பொருளாதாரத்தின் கீழ், பல்தேசியக் கூட்டுத்தாபனங்களினால் உழைப்பு, மூலவளங்களை கொள் ளையடிப்பதற்கான நேரடி ஏஜண்டுகளாக, அனைத்து தேசிய வாத சீர்திருத்தவாதிகளும் மாறியுள்ளனர். அனைத்து தொழிற் சங்க அதிகாரத்துவங்களினதும், பயணப் பாதையாக இது உள்ளது. திறந்த பொருளாதாரத்துக்கு இவர்கள் வழங்கும் ஆதரவின் அர்த்தம் இதுவே.

இந்தப் பொருளாதார விதிமுறையானது, பல்தேசியக் கூட்டுத் தாபனங்களின் முதலீட்டாளர்களுக்கும், அவர்களின் தரகர்களான இந்நாட்டு முதலாளிகளுக்கும், முகாமைத்துவ மட்டத்திலான மத்தியதர வர்க்கத்தினர் சிலருக்கு மட்டுமே கதவுகளை திறந்து விட்டுள்ளது. உலக முதலாளித்துவ பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு லாபவீதம் சரிந்து போகையில், அதை நிறுத் தும் பொருட்டு, இலாபகரமான உழைப்பையும் வளங்களை யும் கொள்ளையடிக்க, பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் உலகம் பூராவும் அலைகின்றன. இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு வரிச்சலுகையை அனுபவித்தவண்ணம் தாம் முதலீடு செய்யும் நாடுகளின் பொருளாதாரத்துக்கு எந்தவிதமான பங்களிப்பும் செய்யாது, அடிமை உழைப்பினை காட்டுமிராண்டித்தனமான முறையில் சுரண்டும் உரிமை திறந்த பொருளாதாரத் திட்டங் களின் மூலம் மூலதனச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட் டுள்ளது. இதன் பெறுபேறாக பல்தேசியக் கூட்டுத்தாபனங்களின் ஆளுமையின் கீழ் தேசியப் பொருளாதாரங்கள் கசக்கிப் பிழியப் படுவதோடு, நலன்புரிச் சேவைகள் அனைத்தும் வெட்டித் தள்ளப்படுகையில் வாழ்க்கைத்தரத்தைப் பேணமுடியாத நிலை மைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இதற்கு எதிராக எதிர்ப்புக்

காட்டும் அல்லது கிளர்ச்சி செய்பவர்களை படுமோசமான இரா ணுவ பாசிச சப்பாத்துக்களால் நசுக்கித் தள்ளுவது ஆளும் வர்க்கங்களின் இலக்காக உள்ளது, அத்தோடு பழைய சீர்திரு த்தவாதிகள் இதன் பொலிஸ் சேவைக்குத் தம்மை அர்ப்பணி த்துக் கொண்டுள்ளனர். சொய்சாக்களதும், குணவர்த்தனாக்க ளதும், நாணயக்காராக்களதும் சேவை அதுதான்.

தேர்தல் பிரச்சாரக்காலங்களின் போதும், தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுக்கப் போராடும் திடசங்கற்பத்தை காட்டிக் கொண்டனர். சுதந்திர வர்த்தக வலையம் உட்பட்ட பல்வேறு துறைகளினதும் தொழிலாளாகள், புகையிரத தொழில்நுட்ப ஊழியர்கள், டாக்டர்கள், பொறியலாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களில் குதித்தனர். யூ.என்.பி இவர்களை பொதுஜன ஐக்கிய முன்ன ணியின் ஆதரவாளர்கள் எனக் குற்றம் சாட்டியது.

மறுபுறத் தில் பொதுஜன ஐக்கிய முன்னணி, தொழிலாளர்கள் எதிர் வரும் அரசாங்கத்துக்கு கஷ்டங்களை உண்டுபண்ணும் யூ. என்.பி சதிகளின் பங்காளிகளாகியுள்ளதாக குற்றம் சுமத்தியது. ஆளும் வர்க்கத்தின் இவ்விருசாராரும் தொழிலாளவர்க்கப் போராட்டங்கள் தொடர்பான தமது பீதியை இதன் மூலம் காட்டிக் கொண்டனர்.

தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களுக்குத் தாக்குதல் தொடுப் பதற்கான ஒரு சூழ்நிலையை சிருஷ்டிக்கும் பொருட்டு கடந்த ஆட்சிக் காலத்தில் திறைசேரியில் இருந்து 1300 கோடி ரூபாக்கள் காணாமல் போயுள்ளது என்ற பாணியிலான கதை கள இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. முன்னைய அரசாங்கத்தின் மீது பழிசுமத்துவதன் மூலம், அது விட்டுச் சென்ற இடத்தில் இருந்து பொதுமக்களுக்கு அடிமேல் அடி அடிக்க வழிதிறப்பது ஆளும்வர்க்கத்தின் வழக்கமான கேடுகெட்ட தொழிலாகும். இதை ஜீரணித்துக் கொள்ள மறுத்துபோராட்டத்தில் குதிக்கும் தொழிலாளர்களையும் ஒடுக் கப்படும் மக்களையும் அன்றைய இன்றைய அரசாங்கங்களின் பங்குதாரர்கள் ஒன்றிணைந்து தாக்குவதும், இதனை நியாயப் படுத்தும் பொருட்டு தொழிலாளர் போராட்டங்களால் நாட்டின் முக்கியமான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு தடங்கல் ஏற்படுவதாக ஆட்சியாளர்கள் கூச்சல் போடுவதும் பொதுமக்க ளுக்கு நன்கு பரிட்சியமானதே. இதற்கான அடிக்கல்லை நாட்டும் பொருட்டு ஜனாதிபதி–பிரதமர் இருவரதும் அதிகாரத் தின் கீழ் பிரசுரமாகும் "டெயிலி நியூஸ்" (ஆகஸ்ட் 20) பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் பின்வரும் பாஷையில் பேசியுள்ளது. "எம்மால் நேற்று முதற் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்ட கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு தேசிய இனப் பிரச்சினைக்கும் நாடு முகம்கொடுத்துள்ள ஏனைய முக்கிய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் பிரம்மாண்டமான பணிக்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கைகோத்துக் கொள்ள வேண்டும்"

சமசமாஜ–ஸ்ராலினிசத் தலைவர்களை கூட்டுச் சேர்த்துக் கொண்டு பொது மக்களால்

நிராகரிக்கப்பட்ட யூ.என்.பி. யின் துணையுட
பொதுஜன ஐக்கிய முன்னணி தொடுக்கவி(
கும் தாக்குதலில் அத்தலைவர்களுக
ஒப்படைக்கப்படும் பணியினை, பு
அரசாங்கத்துடன் இணைந்து கொள்
துடிக்கும் தொண்டமான் சிறிது காலத்துக்
முன்னர் வெளி யிட்டார். பேர்னாட் சொய்சா
80தாவது ஆண்டுதின வைபவத்
சொய்சாவின் நீண்ட வரலாற்றினை வர்ண
கையில் அவர் கூறியதாவது: "உங்கள
தூரப்பயணம் இன் னமும் முற்றுப்பெ
விடவில்லை. உங்களின் செயல்திறன் மி
சேவை நாட்டுக்கு அவசியம். நாடு முன்னெ
போதும் இல்லாத நெருக்கடிக்கு மு
கொடுத்துள்ளது. உங்களின் செயல்திற
கொண்ட பங்களிப்புகள் தொடர்ந்து அவசிய
சொயிசா அர்ப்பணம் செய்துகொண்டு
சேவை யின் தரத்தினையும் அவசியத்தினை
அதை வலியுறுத்தி யவர்களைக் கொ
அளவிடமுடியும். யூ.என்.பி அரசாங் கத்
சேர்ந்துகொண்டு 17 ஆண்டுகள் பூரா
இந்நாட்டுத் தொழிலாளர் ஒடுக்கப்ப
மக்களுக்கு– சிறப்பாக தோட்ட
தொழிலாளர்களை மிலேச்சத்தனமான முறை
சுரண்டித் தள்ள சேவைசெய்த தொண்டமா
பிரார்த்தனையின் படி 'சேவை' செய்வ
சொய்சா ஈடுபட்டுள்ளார்.

## தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம்

சமசமாச தலைவர்களின் இ
பிற்போக்கு சேவையின் கோரத் தன்மையை த
தேசிய இனத்தினரின் ஜனநாயக உரிமை
தொடர்பான பிரச்சனையில் கண்டு கொ
முடியும்.

11 ஆண்டுகளாக இடம் பெற்றுவ
இனவாத யுத்தத்தினால் நசுங்குண்டு கிடக்
தென்பகுதி மக்கள் யூ. என். பி. யு
கோஷத்துக்கும் மக்கள் ஐக்கிய முன்ன
போன்ற மற்றும் முதலாளித்துவக் கட்சி
கட்டவிழ்த்துவட்ட இனவாத வெற்
கூச்சல்களுக்கும் எதிராகத் திரும்பிய
பொதுத் தேர்த்தல் சுட்டிக் காட்டியது. எனி
தமிழ்மக்களின் பிரச்சனைக்கு அரசியல் தீ
வழங்குவதாக பொதுசன முன்ன
அளித்துள்ள வாக்குறுதி சிறீலங்கா சுதந்
கட்சியும் அதன் கூட்டும் இதுகா
வழங்கியுள்ள ஏனைய வாக்குறுதிகளு
எதுவிதத்திலும் குறையாத மோசடிகளை க
கொண்டுள்ளது. தொழிலாளர்–ஒடுக்கப்ப
மக்களை பிளவுபடுத்தும் பொருட்டு இனவா
மதவாதம், உட்பட்ட நானாவித பிரிவின
இயக்கங்களைப் பயன்படுத்தியது. இ
இன்றைய சகாப்தத்தின் சகல ஆ
வர்க்கங்களும் கடைப் பிடிக்கும் முக்
உபாயமாக உள்ளது. தமிழ் தேசிய இனத்து
எதிரான பாகுபாட்டையும் இனவாதத்தை
எதிர்த்த சமசமாசகட்சியின் 1940–50 வருட
வரலாறு அதன் தலைவர்களால் பின்
குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. கொல்
ஆர். டி சில்வாவை அரசியலமைப்புச் ச
அமைச்சராகக் கொண்டு தயார் செய்யப்ப
1972 ல் கூட்டரசாங்கத்தினால் நிறைவேற்றப்ப
சிங்கள–பௌத்த அரசியலமைப்பு இதற்
சாட்சி பகிர்கின்றது. என்றாலும் தமிழ் மக்க
மோசடி செய்யும் பணியிலும் பேர்ன
சொய்சாவின் தோளில் ஏறிநிற்க சி. ல. சு
தலைவி திட்டமிட்டுள்ளார். அரசியல் தீர்வு
தயாராக யுத்தத்தினை நிறுத்தும் பொரு
பேச்சு வார்த்தையில் ஈடுபட்டாலும் சமரசத்து
வர விடுதலைப் புலிகள் மறுத்துவிட்ட
கூறி யுத்தத்தை தொடரும் நடவடிக்கை

தொடர்ச்சி மறுபக்கத்

படிப்பகம்

www.padippakam.com



கத்தொடர்ச்சி

ஜன முன்னணி பாய்ந்து கொள்ளும் ஒரு ஏற்பட்டாலும் அதற்குப் பேர்னாட் சாவிடம் இருந்து தடங்கல் ஏற்படாது தை ஆளும் வர்க்கம் அறியும். இதுவரை ம் யூ. என். பி, சி. ல. சு. க, தூண்டி வந்த இன வெறியை மக்கள் ஐக்கிய னணி, ஜே. வீ. பியைப் படுத்திதொடர்ந்தும் முன்னெடுக்க முடியும் பொதுஜன முன்னணி எண்ண ண்டு.

மறுபுறத்தில் இனவாதத்தின் படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் னுமொரு நிர்வாகப் பிராந்தியத்தின் ரத்தினைத் தமது கைக்குள் போட்டுக் ளும் விடுதலைப்புலிகள் அமைப்பினதும் ம் தமிழ் அமைப்புகளதும் திட்டம் இதற்கு வானதே அல்லாமல் முரணானது அல்ல. னத்துலக ரீதியில் தற்போது இடம் பெற்று அரசியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு இசைவானதே. காசாக் கரையின் மக்களை த்தள்ளும் பொலிஸ் சேவையை பாலஸ்தீன லை இயக்கத்துக்கு வழங்க இஸ்ரேல் ங்குமானால், ஏற்கனவே தமது ஒடுக்கு றையைக் காட்டிக் கொண்டுள்ள விடுதலைப் ள் அமைப்பின் கைகளில் தமிழ் திலாளர்–ஒடுக்கப்படும் மக்களைக் ளிக்க இந்நாட்டின் ஆளும் வர்க்கம் ங்குவது அப்படி ஒன்றும் ஆச்சரியத்துக்கு தல்ல.

இதற்கிடையை இலங்கை முஸ்லீம் ரெசின் அமைச்சர் அஷ்ரப், அம்பாறையில் துறைமுகம் அமைப்பதாக தறுதியளித்ததன் மூலம் முஸ்லீம் மக்களின் பான ஆட்சிப் பிராந்தியம் பற்றிய சைகளை வேகமாக முன்னெடுக்கின்றார். ர்படி பலதேசியக் கூட்டுத்தாபனங்களின் பகரமான உழைப்புக் கொள்கைக்கான ங்களை இன மத அடிப்படையில் ப்பதன் மூலம் தொழிலாளவர்க்கத்தினதும் கப்படும் மக்களதும் போராட்ட சத்தியை தவெள்ளத்தில் மூழ்கடிக்கும் திட்டங்களை கண்டங்களிலும் உள்ள ஆளும்வர்க்கங்கள் ஷ்டித்து வருகின்றன. சிங்கள தமிழ் லாளிகளைப் போலவே முஸ்லீம் ளாளிகளிடையேயும் இந்தப் பிற்போக்கு வக்கு ஏற்ப உடன்பாட்டுக்கு வர இடம் ாமல் இல்லை.

### பாசிச அச்சுறுத்தல்

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ப் வாகுறுதிகளின் நிஜ கோலம் லமானதும் தொழிலாளர்–ஒடுக்கப்படும் ள் அதை எதிர்த்துக் கிளம்பும் நிலையில், ப்பிப் போன குட்டி முதலாளித்துவ, யதர வர்க்கப் பகுதியினரை தமது பாசிச கத்தில் திரட்டிக் கொள்ள ஜே. வீ. பி திருக்கிறது. பொதுத் தேர்தலில் 22 ட்டங்களில் 19 மாவட்டங்களுக்கு டிமிட்ட ஜே. வீ. பி உள்ளடங்கலான பாக்கு மக்கள் முன்னணி பெற்ற வாக்குகள் றுக்கு 1.13 வீதமான சொற்ப வாக்குகளே. வும் எதிர் வரும் காலத்தில் ஒடுக்கப்படும் ளைஞர்கள் கதியற்றுப் போவதை பயன் படுத்தி திலாளர் விரோத பிற்போக்கு குட்டி ளாளித்துவ பாசிச சத்தியாக அது ச்சிகாண உள்ள வாய்ப்பை குறைத்து பிட முடியாது. ஆளும் வர்க்கத்தினரும் டி முதலாளித்துவ ஏசண்டுகளும் ன்டிவிடப் போகும் தமிழர் விரோத

இனவாதத்தினை பாசிஸ்டுகள் தமக்கு சாதகமாகப் பயன் படுத்துவர்.

பேராசிரியர் மண்டேலை பின்பற்றும் கருணாரத்தினாவின் ந. ச. ச. க தேர்தலுக்கு முன்னரே ஜே. வீ. பி யுடன் கூட்டுக்குச் செல்ல எடுத்த முயற்சி, மத்தியதர வர்க்கத்தினரும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் எதிர் காலத்தில் எடுக்கக் கூடிய பிற்போக்கு அரசியல் ஈர்ப்புக்கான நல்லதோர் சமிக்கையாகும். பொதுத் தேர்தல் முடிவடைந்நதுதான் தாமதம் ஜனாதிபதி தேர்தலில் தாம் நிற்கப் போவதாக ஜே. வீ. பி தலைவரான சோமவன்ச அமரசிங்க லண்டனில் இருந்து அறிக்கையில் குறிப்பிட்டார். இந்த



சுதந்திரவர்த்தகவலயத்தில் சுரண்டப்படும் பெண் தொழிலாளர்கள்.

ஏகாதிபத்திய சக்திகளிடம் மட்டுமன்றி ந. ச. ச. க போன்ற முதலாளித்துவ சார்பு தீவிரவாத இயக்கங்களிடமிருந்தும் பாசிச இயக்கத்துக்கு கிடைக்கக் கூடிய ஆதரவினையிட்டு இது கொண்டுள்ள நம்பிக்கையை சுட்டிக்காட்டுகிறது. ந. ச. ச. க உட்பட்ட அனைத்து தேசியவாத சீர்திருத்த வாதிகளும் சோசலிசத்துக்கு எதிராக முதலாளித்துவத்துடன் இணையும் போது அவற்றின் கடைசி துரும்பையும் பாவித்துப் பெற்றுக் கொள்ளும் பலத்தின் மூலம் உயிரைப் பிடித்து வைக்க முடியாதுள்ள முதலாளித்துவ ஆட்சியின் நெருக்கடி தமக்கு கதவுகளை திறந்து விடும் என்பதையிட்டு உலகம் பூராவுமுள்ள முதலாளித்துவச் சார்பு பாசிச இயக்கங்கள் பந்தயம் பிடித்துள்ளன. பிரேமதாசா ஆட்சியுடன் அமைச்சர் பதவிகளுக்கான பேரம் பேசலில் ஈடுபட்டது போலவே இத்தாலியில் ஏகாதிபத்திய பேருஸ்கோனியின் அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை இப்போது பொறுப் பேற்றுக் கொண்டு தொழிற்படும் பாசிச இயக்கங்கள் குட்டி முதலாளித் தவத்தை அணிதிரட்டி தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களை நாளாந்தம் பயங்கரத்துக்கு உள்ளாக்கியும் இரத்தக் களரியில் தள்ளியும் அனைத்துலக நிதிமூலதனத்தின் காட்டுமிராண்டி அவசியங்களை நிறைவேற்றி வைக்கவும் முயற்சிக்கின்றன. இங்கு தொழிலாள வர்க்கத்தின் ஒரு பிரிவினரை குழப்பத்துக்குள் தள்ளி அவர்களை பாசிஸ்டுகளின் பிடிக்குள் கொணரும் கொந்தராத்தினை ந.ச.ச.க பொறுப்பு எடுத்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முன்நிலையில் இந்த ஆபத்து தலைநீட்டிக் கொண்டுள்ளது. அந்த ஆபத்து,

தொழிலாள வர்க்க அனைத்துலகவாத சுயாதீன விதி முறையின் அடிப்படையில் கிளர்ந்து எழும் தொழிலாளர்களிடம் இருந்து ஒடுக்கப்படும் கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்கட்கும் அரசியல் தலைமை கிடைக்காததாலேயே ஏற்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பாளிகள் சமசமாஜ–கம்யூனிச–நவசமாஜ–இ. தொ. கா தலைவர்களும் தொழிற் சங்க அதிகாரத்துவங்களுமே.

தேசிய முதலாளித்துவ இயக்கங்களும் தேசியவாத தொழிலாளர் அதிகாரத்துவங்களும் நான்காம் அகிலத்தின் உலகப் புரட்சிப் பணியை கீழ்ப்படுத்திக் காட்டிக் கொடுக்கச் செயற்பட்ட பப்புலோவாதிகட்கு எதிராக 40 ஆண்டுகளாகப் போராடிவரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே இலங்கையினுள்ளும் இந்தியத் துணைக்கண்டத்தினுள்ளும் தொளிலாளவர்க்க, ஒடுக்கப்படும் மக்களிடையே அனைத்துலக சோசலிச நனவையும் போராட்ட சக்த்தியையும் மீண்டும் தூண்டி விடும் நிஜமானதும், பலமானதுமான இயக்கமாகும். அந்த உலக இயக்கத்தின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் 26 வருட வரலாறு பூராவும், அவ்வாறே இந்த தேர்தல் பிரச்சாரத்தின் உள்ளும் இந்த வேலைத்தட்டத்தின் அடிப்படையிலேயே அரசியல் தலையீட்டை நடாத்தியது. பு. க. க வேட்பாளர்களை நிறுத்திய பதுளை மாவட்டத்தில் அதற்க்கு 685 வாக்குகள் கிடைத்தன.

### பு. க. க வின் பணிகளும் சக்தியும்

தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப் படும் மக்களுக்கும் எதிரில் தோன்றியுள்ள ஆபத்துக்களுடன் ஒப்பிடும் போது அதற்கு எதிராகக் கிளர்ந்து அதைத் தோற்கடிக்கக் கூடிய பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத் திட்டத்தை இத்தேர்தலில் வாக்குக்களின் எண்ணிக்கையில் கிடைத்த ஆதரவின் வரையறுக்கப்பட்ட தன்மையினைக் கொண்டு மூடிமறைப்பது அவசியம் அல்ல. அந்த ஆதரவின் அளவிற்கு ஏற்பத் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்கள் எதிரிலான எதிர்ப்புரட்சியின் ஆபத்து வளர்ச்சி காண்கிறதே அல்லாமல் தேய்ந்து போகாது என்பதையும் நாம் மூடி மறைக்க மாட்டோம். ஆதலால் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப

அனைத்துப் போராளிகளும் பு. க. க. வைச் சூழ அணிதிரள்வது உடனடிப் பணியாகியுள்ளது.இத் தேர்தல் பிரச்சார இயக்கத்தின் போது பு. க. க பதுளை மாவட்டத்தில் ஒரு முனையில் இருந்து மறு முனைவரை பல தோட்டங்களிலும் ஒரு தொகை சேவை நிலயங்களதும் தெழிலாளர்கள் இடையேயும், பரந்த எண்ணிக்கையிலான கிராமங்களில் ஏழைவிவசாயிகள் இடையேயும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வினியோகித்தும், நூல்கள் பிரசுரங்களை விற்பனை செய்தும் தொழிற்பட்டது. சிங்களத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்ட 6000க்கும் அதிகமான தேர்தல் விஞ்ஞாபனங்கள் விற்பனையானதோடு, ஆயிரக்கணக்கான 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்தை' பத்திரிகைகள் தேர்தல் காலத்தில் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களின் கைகளுக்கு சென்றது. பு. க. க. வுக்குகிடைத்துள்ள வாக்குக்களின் எண்ணிக்கை சிறிதாக இருந்த போதிலும், அதன் வேலைத்திட்டம் மூலம் வெளிப்படையான இந்திய துணைக்கண்ட சோசலிச குடியரசின் பாகமாக இலங்கை–தமிழ்ஈழ சோசலிசக் குடியரசினை நிறுவாமல் இந்த தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களுக்கு மீட்சிக்கான வேறு வழி கிடையாது என்பது வெளிப்பாடாகியது. தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களின் கணிசமான எண்ணிக்கையினரின் அங்கீகாரத்துக்கு அந்த வேலைத்திட்டம் உள்ளாகியுள்ளதுஎன்பதை கிடைத்த வாக்குக்கள் நிரூபித்துள்ளது.

மக்களின் வெறுப்புக்கு உள்ளான யூ. என. பி யில் இருந்து தலையெடுக்கும் உத்வேகத்தினால் உந்தப்பட்டு, மாற்று முதலாளித்துவ பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டின் வேலைத்திட்டம் பற்றி எது விதமாதன புரிந்துணர்வும் இல்லாமல் சனத்தொகையினரில் பெரும்பான்மையினர் செயற்பட்ட ஒரு பொதுத் தேர்தலின் உள்ளேயே பு. க. க. தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தை முன்வைத்துப் போராடியது. வெகு விரைவில் பொது மக்கள் முகம் கொடுக்க இருக்கும் ஆபத்துக்களைக் கொண்டு பார்க்கும் இடத்து அரசியல் ரீதியில் சிறுபிள்ளைத்தனமான பொதுசன அபிப்பிராயத்தில் எதுவிதமான சாதகமான தன்மையும் இல்லை. அனைத்தலகக் குளுவினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் வேலைத்திட்டம் இந்தத் திட்டவட்டமான தருணத்தில் கிடைத்த வாக்குகள் எவ்வளவுதான் சிறியதாக இருந்த போதிலும் பொதுமக்களின் எதிர்காலத்தினை தீர்மானம் செய்வதில் தீர்க்கமான பங்கினை அது மட்டுமே வகிக்கப் போகின்றது. பொது மக்களுக்கு இன்று தீர்க்கமானது பல தசாப்தங்களாக துரோக அரசியல் கட்சிகளினால் சிதறடிக்கப்பட்ட அனைத்துலக சோசலிச அரசியல் கலாச்சாரத்தினை மீண்டும் உயிர்ப்பிக்கத்தக்க முன்னோக்கும் வேலைத்திட்டமுமே.

இது சம்பந்தமாக புரட்சிக் கொம்யூனிஸ்ட் கழகம் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது தொழிலாளர் வர்க்கம், ஏழைவிவசாயிகள், இளைஞர்கள், வீட்டுப் பெண்களிடையே ஆழமான அடிப்படையை ஏற்படுத்திக் கொண்டது. இது எதிர்வரும் வரலாற்றுப் புரட்சிப்பணியை நிறைவேற்றுவதை உத்தரவாதம் செய்கின்றது.

புரட்சிக் கொம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து அதன் வேலைத்திட்டத்தினைச் சூழ அணிதிரள்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி நாம் சகல போராளிப் பகுதியினரையும் வேண்டுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



1 ம் பக்கத் தொடர்ச்சி

ஐக்கியதேசியக்கட்சி ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அமைப்புமுறையை உருவாக்கியது. அரைச் சர்வாதிகார ஆதாரங்களைக்கொண்ட இதன்மூலம் தொழிலாளவர்க்கத்தின் வெற்றிகள் நிர்மூலமாக்கப்பட்டு மலிந்த கூலியுழைப்பை வழங்குவதன்மூலம் பலதேசியநிறுவனங்கள் முதலிடுவதற்கான சுதந்திரவர்த்தகவலையங்கள் உருவாக்கப்பட்டன. அதேநேரத்தில் வடக்கு, கிழக்கில் இனவாத யுத்தமும் தெற்கில் அரசபயங்கரவாதமும் முடுக்கிவிடப்பட்டது.

சிறீலங்கா முதலாளித்துவம் மீண்டும் ஒருமுறை சர்வதேச பொருளாதார பரந்துபட்ட அழுத்தங்களாலும் பரந்துபட்ட மக்கள் தீவிரமயப்படுத்தலுக்கும் பயந்தும் ஆட்சியை மாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றது.

## இந்த ஆட்சிக்கான தொழிலாள அதிகாரத்துவங்களின் ஆதரவு.

முழுத்தொழிலாள அதிகாரத்துவங்களும் இந்த புதிய அரசாங்கத்திற்கு பின்னணியில் அணிவகுத்து நிற்கின்றன. 1964ல் SLFPயுடன் கூட்டிற்கு சென்றதன்மூலம் வரலாற்றுத் துரோகமிழைத்த LSSP இந்த புதிய கூட்டில் அழைக்கப்பட்டதுடன் ஒரு மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இதேபோல கம்யூனிஸ்ட் கட்சியும் மீண்டுமொருமுறை இக் கூட்டில் பங்குகொள்கின்றது. இந்த அரசாங்கத்திற்கு வுஸ்ரீ யினது மறைமுகமான ஆதரவு அது தனது ஜனாதிபதி வேட்பாளரை வாபஸ் வாங்கி சந்திரிக்கா குமாரதுங்காவிற்கு ஆதரவு அளித்ததன் மூலம் வழங்கப்பட்டது. அத்துடன் UNP யின் நீண்டநாள் அரசாங்கப் பங்காளரான இலங்கைத் தொழிலாளர்காங்கிரசின் ஆதரவும் இந்த ஆட்சிக்கு கிடைத்தது.

ஏர்ணஸ் மண்டேலின் ஐக்கியசெயலகத்தில் இணைந்த குட்டிமுதலாளித்துவ மத்தியவாத NSSP யின் ஆதரவும் இந்த ஆட்சிக்கு வழங்கப்பட்டது. இதனது பாராளுமன்றப் பிரதிநிதியான வாசுதேவநாணயக்காராவினால் தலைமைதாங்கப்பட்ட ஒரு பிரிவானது நேரடியாக பொதுஜனஐக்கியமுன்னணியில் இணைந்துகொண்டது. று. கருணாரத்தினாவால் தலைமை தாங்கப்பட்ட மற்றப்பிரிவு ஐக்கியதேசியக்கட்சியை "விரட்டுவதற்காக" சந்திரிக்கா குமாரதுங்காவிற்கு வாக்களிக்க கோரிக்கை விடுத்தது. இந்த தேர்தல் 1964ல் LSSP,CPயும் "சிறீலங்கா சுதந்திரக்கட்சியை சோசலிசத்திற்குத் தூண்டிவிடுவதற்கு" செய்யப்பட்ட கூட்டுமுன்னணி போன்ற ஒன்றிற்குத் திரும்புவதற்கான நிலைமைகளை உருவாக்கும் என நம்பி ஒருவரும் தங்களைக் கட்டாயமாக முட்டாள்களாக்கத் தேவையில்லை. இந்தக் கூட்டு பழைய தேசிய சீர்திருத்தவாத வேலைத்திட்டத்தை முழுமையாக கைவிட்டுவிட்டது. முதலாளித்துவ SLFP முழுமையாக UNP யின் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது.

சமாதானம், செழிப்பு, கௌரவம் என்ற கோசங்களுக்குள் மறைந்து நின்று பொதுஜனமுன்னணியானது தொழிலாளர்களுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் மீதான புதியகட்ட தாக்குதலுக்கு தயாராகின்றது. ஏற்கனவே "வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவிப்பதும், பாதுகாப்பதும்" தான் பிரதானமான பணி என இந்த ஆட்சி பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் அடித்தளத்தில்தான் முதலாளித்துவ தேசியவாத LTTE யுடன் "சமாதான முயற்சிகள்" தொடங்கப்பட்டிருக்கின்றது.

இந்த முயற்சிகளின் உண்மையான நோக்கம் என்ன என்பது சமீபத்தில் பிரித்தானிய தூதுவர் John Field இனால் வழங்கப்பட்ட ஆலோசனையில் பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டது. "வெளிநாட்டு மூலதனத்தினால் முதலிடப்படுவதற்காக காத்துக்கொண்டிருந்த 1 பில்லியன் டொலருக்கு மேற்பட்ட திட்டங்கள் தற்போது வியட்நாமிற்கு திருப்பப்பட்டிருப்பதை அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். ஒரு ஸ்தாபிக்கப்பட்ட பந்தையப் பாதையைக்கொண்ட சிறீலங்கா மாதிரியான நாட்டிற்கு இது ஒரு பல மடங்கான தொகையாகும். உங்களிடம் மனிதசக்தி இருக்கின்றது, தொழில் திறமை இருக்கின்றது, கல்வியறிவு இருக்கின்றது அப்படியிருந்தும் இது ஏன் நடக்கின்றது. நான் நினைக்கின்றேன் சண்டையினால் ஏற்படுத்தப்பட்ட நிலைகுலைந்த நிலைமைகள்தான் முதலிடுவோர் மத்தியில் ஒரு தயக்கத்தை ஏற்படுத்துவதற்கு முதன்மையான காரணமாகவிருக்கின்றது. நான் நினைக்கின்றேன் நீங்கள் தொடர்ந்தும் தாமதிக்க முடியாது....... நாங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை........ எங்களுக்கு தெரியும் நீங்கள்தான் இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏதாவது வகையில் எங்களது உதவி இதைத் தொடங்கி வைப்பதற்கு தேவைப்படுமெனின் நாங்கள் தயாராகவிருக்கின்றோம்."

## தமிழீழவிடுதலைப்புலிகள் ஏகாதிபத்தியத்தின் பக்கம் திரும்புகின்றனர்.

கொழும்பின் அரசாங்கத்தைப் போலவே, LTTE யும் வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்வதில் ஆர்வம் கொண்டுள்ளது. அதனால் தொடர்ந்தும் பனைமரத்தினையும், சைக்கிள் சக்தியையும் அடித்தளமாகக்கொண்டு "சுயபூர்த்திப் பொருளாதாரத்தை" உருவாக்குவது என்ற நடைமுறைப்படுத்த முடியாத தேசியவாதக் கற்பனையை தூக்கிப்பிடிக்க முடியாமல் இருக்கின்றது. பதிலாக அதனது பிரதானமான பேச்சாளர்கள் தற்போது சுதந்திரவர்த்தகவலையங்களையும், பல்தேசியநிறுவனங்களையும் பற்றிக் கதைக்கின்றனர்.

அதேநேரத்தில் PLO விற்கும் இஸ்ரேலிற்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் போன்ற ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கும், கொழும்பு அரசாங்கத்துடன் தனது படைகளைப் பாவித்து தமிழ் மக்களின்மேல் பொலீஸ் நடவடிக்கையெடுக்கவும் LTTE தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளது.

LTTE யின் தலைவர் அன்ரன் பாலசிங்கம் இந்தியப் பத்திரிகையான "Frontline" ற்கு கடந்த மாதம் சொல்கையில் "இந்தப் பிரதேசங்களை கட்டுப்படுத்தவும், நிர்வகிக்கவும் நாங்கள் எங்களது சொந்த முறையினை வளர்த்தெடுத்திருக்கின்றோம். எல்லாருக்கும் இது தெரியும் ஏனெனில் அரசாங்க இயந்திரம் உடைந்துவிட்டது. சிறீலங்காவின் சட்டத்திற்கும் ஒழுங்கிற்குமான இயந்திரமில்லாதபடியினால் நாங்கள் இதை உருவாக்கவேண்டி வந்தது. இது நாங்கள் அரசியல் உடன்பாட்டிற்குப் போகமாட்டோம் என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லை. எங்களுடைய மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு உத்தரவாதம் வழங்கக்கூடிய ஒரு கூடிய தொகையிலான திட்டங்களையே டுவ்வுநு கவனத்தில் எடுத்துள்ளது. சிறீலங்கா அரசாங்கத்துடன் செய்துகொள்ளும் உடன்பாட்டின் மூலமாக இந்தக் கட்டுமானங்களை வளர்த்தெடுத்துக்கொள்ளலாம். உதாரணமாக பொலீஸ் படையை எடுத்துக்கொண்டால் எங்களிடம் தற்போது இருப்பது ஒரு அடித்தளமான கட்டுமானம் மட்டும்தான் இது அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் மேலும் வளர்த்தெடுத்துக் கொள்ளக் கூடியது."

தீவு முழுக்க முதலாளித்துவ வர்க்கத்தினரது வேலைத்திட்டம் தொழிலாளர்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் மலிந்த கூலியுழைப்போராக மாற்றுவதுதான், இதன் மூலம் சுரண்டலின் கொடிய நிலைமைகளை உருவாக்கி வெளிநாட்டு மூலதனங்களை உள்வாங்குவதாகும். தொழிலாளர்கள் பியகம சுதந்திரவர்த்தக வலையத்தில் அன்செல் லங்கா நிறுவனத்திலும் ஏனைய நிறுவனங்களிலும் போராட்டத்தில் குதித்தபோது புதிய அரசாங்கமானது தொழிலாளர்களை சுடுவதற்காக பொலீசை அனுப்பி வைத்தது. இதை நியாயப்படுத்தி சந்திரிக்கா குமாரதுங்கா பிரகடனப்படுத்துகையில் "தொழிலாளர்களுக்கு ஞாபகமிருக்கவேண்டும் உள்நாட்டு முதலீட்டாளர்களைப் போலன்றி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்களது தொழிற்சாலைகளை மூடிவிட்டு வேறு இடங்களுக்குச் செல்லமுடியும். தாய்லாந்து, வியட்நாம், சீனா போன்ற நாடுகளில் மிகவும் கவர்ச்சியான மூலதனமிடும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன."

மிகவும் சமீபத்தில் சிலாபத்தில் Voice Of America வின் சேவைநிலையத்தினை திறப்பதற்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்த மீனவர்கள் மீது பாதுகாப்புப் படைகள் சுட்டதில் ஒரு மீனவர் கொல்லப்பட்டார்.

LTTE யுடன் செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் மக்களின் ஜனநாயக அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்குப் பதிலாக, வடக்கு, கிழக்கின் தொழிலாளர்களையும், ஒடுக்கப்பட்டோரையும் தெற்கில் பலதேசியநிறுவனங்கள் மேற்கொள்ளும் காட்டுமிராண்டித்தனமான சுரண்டலைப் போன்ற நிலைமைகளுக்கு உட்படுத்தும்.

இந்த முதலாளித்துவ பொதுஜனமுன்னணி அரசாங்கம் LSSPயினதும் ஏனைய துரோகக் கும்பலினதும் உதவியுடன் பதவிக்கு வந்தது சிறீலங்கா முதலாளித்துவத்தின் பலத்தினைக் காட்டவில்லை, பதிலாக அதனது நெருக்கடியையும், பரிதவிப்பையுமே பிரதிபலிக்கின்றது. தொழிலாளவர்க்கம் ஒரு தலைமைக்கும், முன்னோக்கிற்குமான நெருக்கடிக்கு முகம்கொடுக்கின்றது.இந்த பொதுஜனமுன்னணி ஆட்சியினது தாக்குதல்களுக்கும், ஆளும்வர்க்கத்தின் பொலீஸ் – இராணுவ சர்வாதிகார தயாரிப்புக்களுக்கும் எதிராக தொழிலாளவர்க்கம் போராடுவது என்பது எந்த மட்டத்திற்கு அது ஒரு புதிய வேலைத்திட்டத்தினால் ஆயுதபாணி ஆகின்றது என்பதிலேயே தங்கியிருக்கின்றது. மேலும் மேலும் ஊசலாட்டமான இந்த அரசியல் நிலைமைகள் தமிழீழசிறீலங்கா ஐக்கியசோசலிசக் குடியரசுகள் என்ற வேலைத்திட்டத்திற்காகப் போராடும் ஒரு சுயாதீனமான தொழிலாளவர்க்க இயக்கத்தினது தேவையைக் கூர்மையாக்குகின்றன. இது நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டியெழுப்புவதனாலேயே சாத்தியமாகும்

*கொழும்பின் அரசாங்கத்தைப் போலவே, LTTE யும் வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்வதில் ஆர்வம் கொண்டுள்ளது. அதனால் தொடர்ந்தும் பனைமரத்தினை சைக்கிள் சக்தியையும் அடித்தளமாகக்கொண்டு "சுயபூர்த்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது என்ற நடைமுறைப்படுத்த முடியாத தேசியவாதக் கற்பனையை தூக்கிப்பிடிக்க முடியாமல் இருக்கின்றது. பதிலாக அதன பிரதானமான பேச்சாளர்கள் தற்போது சுதந்திரவர்த்தகவலையங்களை பல்தேசியநிறுவனங்களையும் ப கதைக்கின்றனர்.*

படிப்பகம்

www.padippakam.com



# சந்திரிகா குமாரதுங்காவும், தீவிரவாதிகளும்.

துங்காவின் அரசியல் வாழ்க்கையை
ஒரு சுருக்கமான ஆய்வ! இவர்
காலத்தில் கூட்டுச்சேர்ந்திருந்த
" தீவிரவாதிகளின் இன்றைய
ினை வெளிப்படுத்துகின்றது.
டன் இவரை முன்னுக்கு
ன்டுவருவதற்காக
" அரசியல்
ப்பவாதிகளால்
பாத்திரம்
கப்பட்டது
தையும்
வுபடுத்துகின்றது.

பாரிஸ்
onne ல் இவரது
வப்பருவ
தில் 1968
ாசி– ஆனியில்
சில் உருவாகிய
லநிறுத்தத்தின்
தன்னை
வர்
ாரக்குழு" என தன்னை
கரித்துக்கொண்டார்.
ளின் பொதுத்தேர்தலின்போது
து தாயாரின் SLFP க்கும் அதனது
சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி
ற்கும் எதிராளியாகத்
னக்காட்டிக்கொண்டார். பப்லோவாத
சமசமாஜக்கட்சி (புரட்சி) யின்
வரான பாலாதம்பு சந்திரிக்காவின்
ர்தொடர்பு அலுவலகராக
நாடுகளிலிருந்து சந்திரிகா எழுதிய
கைகளை வெளியிட்டு விநியோகம்
ார்.

க்கா குமாரதுங்கா 1973ல்
க்குத்திரும்பியபோது ஒரு
தடையுமின்றி அன்று பிரதமராக
த இவரது தாயாருடன்
ணந்துகொண்டார். இவருக்கு அரச
டக்கூட்டுத்தாபனத்தின்
ப்பாட்டிலிருந்த நிலச்சீர்திருத்தக்
பில் இயக்குனர் பதவி
கப்பட்டது. இவரது குடும்பத்தின்
ாள் சொத்துக்களான பாரிய
கெளும் இதற்குள் அடங்கியிருந்தது.

SLFP தோற்கடிக்கப்பட்டவுடன்
தனது கணவனுடனும் இன்னும்
ஆதரவாளர்களுடனும் கட்சியிலிருந்து
த்துக்கொண்டு வெளியேறி
ங்கா மக்கள்கட்சியை (SLMP)
வாக்கினார்.
முதலாளித்துவக்கட்சி உடனடியாக
சமாஜக்கட்சியின் பப்லோவாதிகளால்
ங்காவின் "மிகப்பெரிய
லாளவர்க்கக் கட்சி" என
கிப்பிடிக்கப்பட்டது.

நேரத்தில் நவசமசமாஜக்கட்சி
Pயிலிருந்து அன்று விலகியிருந்த



பெர்னாட் சொய்சா

LSSP, CP ஐ ஒன்றுகூட்டிSLMPயுடன் இணைந்து ஒரு புதிய கூட்டை உருவாக்குவதில் பிரதானமான பங்கை வகித்தது. ஐக்கிய சோசலிச முன்னணி (USA) என அழைக்கப்பட்ட இந்தக் கூட்டுத்தான் தற்போதைய பொதுஜனமுன்னணியை உருவாக்குவதற்கான அத்திவாரக்கல்லாகும்.

மண்டேலின் "ஐக்கியசெயலகத்தில்" இணைந்ததின் பின்னர் முழுமுயற்சியையும் மேற்கொண்டது சந்திரிக்கா குமாரதுங்காவை முன்னுக்குக்கொண்டுவரும் நோக்கத்தில்– இந்த நேரத்தில் மீண்டும் SLFP யில் இணைந்துவிட்ட சந்திரிக்கா "இடதுசாரித்" தலைவராக NSSP யினால் தூக்கிப்பிடிக்கப்பட்டார்.

இந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் நோக்கில் NSSP தனது வார வெளியீடான கரய (Haraya) பத்திரிகையின் கடந்தமாத இதழில் அதனது முக்கியமான இரண்டு தலைவர்களுக்கிடையிலான உடைவு இந்த பொதுஜனமுன்னணிக்குள் இணைவதா அல்லது வெளியிலிருந்து ஆதரவு கொடுப்பதா என்ற பிரச்சனையால் ஏற்பட்டது என எழுதியிருந்தது.

இந்த அரசியல் தலையங்கம் பின்வருமாறு தொடங்கியது. "நாங்கள் காணக்கூடியதாக பாகு (விக்கிரமபாகு கருணாரத்ன NSSPசெயலாளர்) வின் நிலைப்பாடு பொதுஜனமுன்னணிக்கு வெளியே ஒரு இடதுசாரி சக்தியை உருவாக்குவது சாத்தியமாகக் கூடியது என்றிருந்தது.

வாசுதேவநாணயக்கார பொதுஜனமுன்னணிக்குள் நுழைந்தவர் பொதுஜனமுன்னணிக்குள் எற்கனவே சீரழிவுகள் உருவாகிவிட்டதால் "வாசு அப்படி ஒரு இடதுசாரிச் சக்தி அதற்குள்ளேயே உருவாக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது என்று காண்கின்றார்."

தற்போது கருணாரத்ன வேறு ஒரு முன்னணியை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றார். அதில் ஏனைய சக்திகளுடன் 1987– 88 பயங்கரவாதத்தின்போது ஒரு டசினிற்கும் மேற்பட்ட NSSP அங்கத்தவர்களைக் கொலைசெய்த பாசிச JVP யும் அடங்குகின்றது.

சோசலிசத்தொழிலாளர் கழகம்
**Bund Sozialistischer Arbeiter**

## பொஸ்னியாவின் போர் இதற்கு ஒரு தீர்வு இருக்கின்றதா?

### பொதுக்கூட்டமும், கலந்துரையாடலும்.

பேச்சாளர்கள்: Peter Schwarz ( பீற்றர் சுவாட்ஸ்) நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் காரியாளர்.

Hasan Jaso, Stuttgart ல் வாழும் பொஸ்னியத் தொழிலாளி.

**Stuttgart:**
9.12.94 வெள்ளிக்கிழமை
நேரம்: பிற்பகல் 7 மணி.
"Altes Feuerwehrhaus"
Möhringer Str. 56

**Dortmund:**
10.12.94 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 4 மணி
Dietrich- Keunning- Haus
Hauptbahnhofற்கு பின்னால் உள்ள மண்டபம்.

**Berlin:**
17.12.94 சனிக்கிழமை
நேரம் பிற்பகல் 4 மணி
Ranke Gymnasium
Puttbusser Str. 12-15.

**Abonniert jetzt die**
14-tägige Zeitung des Bunds Sozialistischer Arbeiter

❑ Ich möchte die neue Arbeiterpresse ab Nr. ........ kennenlernen.
Für 4 Ausgaben zahle ich DM 10,- (BRD) DM 15,- (Europa) DM 20,- (Welt)

❑ Ich möchte die neue Arbeiterpresse ab Nr. ........ abonnieren
Für ein Jahr (24 Ausgaben) zahle ich
DM 65,- (BRD) DM 85,- (Europa) DM 125,- (Welt)
Für ein halbes Jahr (12 Ausgaben) zahle ich
DM 35,- (BRD) DM 45,- (Europa) DM 65,- (Welt)

Name, Vorname ______
Straße, Hausnummer ______
Postleitzahl, Ort ______
Unterschrift ______

Ich weiß, daß ich die Abonnement-Bestellung innerhalb von 7 Tagen gegenüber der neuen Arbeiterpresse widerrufen kann, und bestätige dies durch meine 2. Unterschrift. Zur Wahrung der Frist genügt die rechtzeitige Absendung des Widerrufs (Datum des Poststempels).

Datum, Unterschrift ______

❑ Ich habe DM ............ auf Konto 21 185-431
bei der Postbank Essen überwiesen, Bankleitzahl 360 100 43
Bestellungen bitte richten an *neue Arbeiterpresse*, Postfach 1001 05, D-45001 Essen
Die Lieferung der *neuen Arbeiterpresse* beginnt sofort nach Zahlungseingang

படிப்பகம்